
குழந்தைகள் பத்திரிகை
26-10-1975
60 காசு

கோகுலம்



எல்லா விதத்திலும் சிறந்த பல்புகள்

பிலிப்ஸ்



பிலிப்ஸ் பல்புகள்

கோகுலம்

மலர் 4 ※ இதழ் 15

அக்டோபர் 26, 1975

ராட்சஸ, ஐப்பசி 9

சந்தா விகிதம்
இந்தியா

ஒரு வருடம் ரூ. 15.00
ஆறு மாதம் ரூ. 7.50

இதர வெளிநாடுகள்

ஒரு வருடம் ரூ. 33.00
ஆறு மாதம் ரூ. 16.50




உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும் - பாரதியார்

தீபாவளிக்குப் பட்சணம்

தீபாவளி வருகிறதே, அதற்கு விதம் விதமான தின்பண்டங்கள் எல்லாம் அப்பா கடையிலிருந்து வாங்கி வந்தாலும் அம்மாவும் வீட்டில் சில சுவையான பட்சணங்களைச் செய்வாளில்லையா? இதோ அம்மாவிடம் கூறி இந்த வருஷம் இந்தச் சுவையான சாக்லேட் பட்சணத்தைச் செய்யச் சொல். கொஞ்சம் செலவு அதிகமானாலும், தீபாவளி போன்ற சமயங்களில்தான் இதைச் செய்ய முடியும். அப்பா வாங்கி வரும் கடைப் பட்சணத்தைக் குறைத்துக் கொண்டு. நாலு அவுன்ஸ் சாதாரண சாக்லேட் பாளம் (பெரிய கடைகளில் கிடைக்கும்) வாங்கி வரச் சொல். அரை பவுண்டு ஏதாவது நல்ல பிஸ்கோத்து. வீட்டிலே பிஸ்கோத்து உள்ள டின்னில் உடைந்து நொறுங்கியுள்ள பிஸ்கோத்துகள் இருந்தால் அதுவே கூடப் போதும். ஏனென்றால் பிஸ்கோத்துகளை உடைத்து நொறுக்கித்தான் இந்தப் பட்சணம் செய்ய வேண்டும். இரண்டு டேபிள் ஸ்பூன் தேன், இரண்டு அவுன்ஸ் வெண்ணெய் இவைதான் இதற்குத் தேவையான சாமான்கள்.

ஒரு பாத்திரத்தில் (சாஸ் பேன்) கொஞ்சம் தண்ணீர் வைத்து அதனுள் ஒரு சிறிய பாத்திரத்தை மிதக்க விடுங்கள். அந்தச் சிறிய பாத்திரத்தில் சாக்லேட் பாளத்தைப் போடுங்கள். இனி நீருள்ள பாத்திரத்தை அடுப்பில் வையுங்கள். தண்ணீர் கொதிக்கும்படி அடுப்பை எரிய விடுங்கள். இந்த நிலையில் சாஸ்பேனில் மிதக்கும் சிறிய பாத்திரத்தில் சாக்லேட் பாளம் உருகிக் குழம்பாகும். இத்துடன் வெண்ணெயையும் தேனையும் சேர்த்துக் கலக்குங்கள். எல்லாம் நன்றாகக் கலக்கும் வரை தண்ணீர் கொதிக்கட்டும். இனி சாக்லேட் குழம்புள்ள சிறிய பாத்திரத்தை வெளியில் எடுத்து விடுங்கள். இதற்குள் பிஸ்கேத்துகளை உடைத்து நொறுக்கித் தூளாக்கி வைத்திருக்க வேண்டும். இந்தப் பிஸ்கோத்துத் தூளைச் சாக்லேட் குழம்பில் போட்டு ஒரு கிளறு கிளறிக் கலந்து கொள்ளுங்கள். இனி நெய் தடவிய தாம்பாளத்தில் இந்தக் கலவையை ஸ்பூனினால் எடுத்து வடாம் கிள்ளி வைப்பது போல் வைத்தாலும் சரி, அல்லது தட்டில் கொட்டிப் பரத்திக் கீறு போட்டாலும் சரி. ஆறிய பிறகு எடுத்து வாயில் போட்டுப் பாருங்கள். ம்.... என்ன ருசி, என்ன ருசி! சாக்லேட் மெதுமெதுப்பு, பிஸ்கட் கரகரப்பு, மணம், சுவை! புது மாதிரியான பட்சணம். ஏ ஒன்றாக இருக்கும்! தனித் தனியாகச் சாக்லேட்டையும் பிஸ்கோத்தையும் சாப்பிடுவதற்குப் பதில் இப்படித் தயாரித்துச் சாப்பிடுவது ஒரு புதுமைதானே? கொஞ்சம் 'காஸ்ட்லி' யானாலும் கடைப் பட்சணத்தைவிட எவ்வளவோ மேல். ருசியும் கூட.

— கே. சந்திரா



அறநெறி

திருமுருக கிருபானந்தவாரியார்

15. மனைவியின் மதிநயம்

மாசிலாமணி, உள்ளத்தில் மாசில்லாதவன். உத்தம அன்பன். தூய்மையும் வாய்மையும் படைத்தவன். அவனுக்கு மகப் பேறு கிட்டவில்லை. அவன் மனைவி மதி நலம் படைத்தவள். மட்டுவார் குழலி என்ற பேர் உடையவள். கணவன் கருத்தறிந்து நடப்பவள். பலப் பல விரதங்களை மேற்கொண்டு குழந்தைப் பேறு வேண்டித் தெய்வத்தைப் பரவி வந்தாள்.

தல யாத்திரை செய்ய விரும்பினாள். இராமேசுவரம் போய், கடலில் முழுகி இராமலிங்கத்தைத் தொழுதால் இறையருளால் சந்தானம் கிடைக்கும் என்று எண்ணினாள். இக்கருத்தைக் கணவனிடம் கூறினாள்.

மாசிலாமணியிடம் ஆயிரம் தங்கப் பவுன்கள் இருந்தன. பழங்காலத்தில் வங்கிகள் இல்லை. தங்கப் பவுனை யாரிடம் தருவது ? தந்தால் வராது.

புஸ்தகம் வனிதா வித்தம்
பரஹஸ்தம் கதம் கதம்

என்பது பழமொழி.

''புத்தகம், பெண், செல்வம் என்ற இந்த மூன்றும் இன்னொருவனிடம் போனால் போனதுதான். ஆதலால் 'பொருளை யாரிடம் தருவது? எங்கே வைப்பது?'' என்ற பிரச்னை எழுந்தது.

மாசிலாமணியின் எதிர் வீட்டில் மாயாண்டி என்ற ஒரு நண்பன் இருந்தான். அவன் பரம வஞ்சகன். மாசிலாமணி சூதுவாது இல்லாதவன். மாயாண்டியுடன் ஆலோசித்தான். ஊருக்கு வெளியே உள்ள பத்ரகாளி கோயிலில் உள்ள அரச மரத்தடியில் புதைத்து வைப்பது என்று முடிவு செய்தான். ஆயிரம் பவுன்களையும் செப்புத் தோண்டியில் இட்டு, அன்று இரவு பத்து மணிக்கு, மாசிலாமணி மாயாண்டியுடன் காளி கோயிலுக்குப் போய் அரசமரத்தடியில் புதைத்துவிட்டு வந்தான். மனம் ஆறுதலாக மனைவியுடன் இராமேசுவர யாத்திரை சென்றான். மறு நாளே மாயாண்டி போய்த் தோண்டி, தோண்டியைக் கொண்டு வந்துவிட்டான்.

மாசிலாமணி மூன்று மாதங்கள் நிம்மதியாக, இராமேசுவரம், திருச்செந்தூர், திருநெல்வேலி, கன்யாகுமரி, மதுரை, பழநி, திருச்சிராப்பள்ளி, வயலூர், திருவானைக்கா, திருவரங்கம் முதலிய பல திருத்தலங்களைச் சேவித்துவிட்டு வீட்டுக்கு வந்தான். அப்போதுமாயாண்டி வெளியூர் போயிருந்தான்.

மாசிலாமணி அன்றிரவு காளிகோயிலுக்குப்போய்த்தோண்டிப் பார்த்தான். தோண்டியில்லை: அதிர்ச்சி அடைந்தான். மாயாண்டிதான் அபகரித்தான் என்று எண்ணினான். வீட்டுக்கு வந்து மனைவியிடம் கூறி அழுதான்.

மட்டுவார் குழலி கூரிய அறிவு நயம் உடையவள். கணவனைப் பார்த்து ''நாதா ! அழுதால் போன பணம் வருமா? இதைப் பற்றி வெளியே வேறு ஒருவருக்கும் சொல்ல வேண்டாம். நான் ஒரு சூழ்ச்சி செய்து போன பணத்தை வரும்படி செய்வேன் '' என்றாள்.

மறு நாள் மூன்று செப்புத் தோண்டிகளை வாங்கி வந்து, அவற்றுள் கருங்கல் துண்டுகளை இட்டு மூடித் துணி சுற்றிப் பூசை அறைக்குள் வைத்தாள்.

மாயாண்டி வந்தான். மட்டுவார் குழலி அவனை அன்புடன் வரவேற்று, ''அண்ணா ! உங்கள் ஆசியால் யாத்திரை சுகமே முடிந்தது. இந்தாருங்கள் பிரசாதம். போன இடத்தில் ஓர்



இரும்புக் கடை ஏலத்தில் எடுத்து ஐயா விற்றார். அதில் மூன்று ஆயிரம் தங்கப் பவுன்கள் கிடைத்தன. ஐயாவும் நானும் காசி போய்க் கங்கா ஸ்நானம் செய்து விசுவநாதரைச் சேவிக்க எண்ணுகின்றோம். இதோ பாருங்கள். இந்த மூன்று செப்புத் தவலைகளை முன் சேமித்த இடத்திலேயே சேமித்து வையுங்கள்'' என்றான்.

மாயாண்டி, ''நல்லது'' என்று பஞ்சாமிர்தம் முதலிய பிரசாதங்களை வாங்கிக் கொண்டு தன் வீட்டுக்குச் சென்றான். அவன் மூளை வேலை செய்ய ஆரம்பித்தது. 'இன்றிரவு அரசடியில் தோண்டிப் பார்த்துப் பழைய தோண்டி இல்லையானால் இந்த மூன்று தோண்டிகளையும் புதைக்கமாட்டார். அது இருந்தால்தான் இவற்றைப் புதைப்பார்கள். புதைத்துவிட்டு இவர்கள் காசி போய்விட்டால் நாம் நான்கு தோண்டிகளையும் அபகரித்துக்கொள்ளலாம்' என்று எண்ணினான். அன்றிரவு ஒன்பது மணிக்குக் கொண்டு போய் அந்தப் பொற்குடத்தைப் புதைத்து வைத்துவிட்டான். இதனை உணர்ந்த மட்டுவார் குழலி மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தாள்.

இரவு பத்து மணிக்குக் கணவனுரை அனுப்பி அந்தத் தோண்டியைக் கொணருமாறு செய்தாள்.

இரவு பதினொரு மணிக்கு மாயாண்டி வந்தான். ''மாசிலாமணி! போகலாமா?'' என்றான். மனைவி சொல்லித் தந்த யோசனைப்படி மாசிலாமணி கூறுகின்றான்.

''மாயாண்டி! மாலையில் இருந்து என் மனைவிக்கு உடல் நலம் இல்லை. அதனால் காசி யாத்திரையை மூன்று மாதங்கள் தள்ளி வைத்துவிட்டேன். இப்போது நான் போய்த் தங்கத் தோண்டியைக் கொண்டு வந்துவிட்டேன். உன்னைப் போன்ற உத்தம நண்பன் இருக்கின்ற போது எனக்கு ஒரு குறையும் வராது. நீ கவலைப்படாதே. போய் வா. எல்லாம் ஈசன் செயல். மாயாண்டி! உனக்கு நன்றி'' என்றான். இந்த வசனத்தைக் கேட்டு மாயாண்டி அயர்ந்து வாய் பிளந்து நின்றான். தன் இருப்பிடம் சென்றான்.

மனைவியின் மதி நயத்தால் மாசிலாமணி நலம் பெற்றான்.

''பழந்தனம் இழந்தவர்

படைத்தவரை யொத்தான்'' —கம்பர்





நேருஜி விலங்குப் பூங்கா

குண்டுமணி

ஹைதராபாத் என்றால் உங்களுக்கு நைஜாம் மன்னர் நினைவு வரும். நைஜாம் மன்னர் உஸ்மான் சின்னக் குழந்தையாக இருந்தபோது நடந்த நிகழ்ச்சி. ஒரு கிராமத்தில் சிறுவன் வண்ணக் கிளி ஒன்றை வைத்திருப்பதைப் பார்த்தான் சிறுவன் உஸ்மான். உடனே அது தனக்கு வேண்டும் என்று அழுதான். உஸ்மானின் தந்தை சில அரண்மனைச் சேவகர்களை அனுப்பி அந்த வண்ணக் கிளியை விலைக்குப் பெற்று வரச் சொன்னார். அந்தக் கிராமத்தின் பணக்காரர் நைஜாம் மன்னரின் பிரியத்தைச் சம்பாதிக்க அந்தச் சிறுவனிடமிருந்து வண்ணக் கிளியைப் பிடுங்கினார். சிறுவனின் தந்தைக்கு நூறு ரூபாய் கொடுத்தார் ! இளவரசன் உஸ்மானின் கையில் வண்ணக் கிளி வந்ததும் அவன் முகம் மலர்ந்தது ; ஆனால் ஏழைச் சிறுவனின் அழுகை வர வரப் பெரிதாயிற்று. இதைக் கண்ட உஸ்மானின் தந்தை நைஜாம் அந்த வண்ணக் கிளியைத் திரும்ப ஏழைச் சிறுவனிடமே தந்து விட்டார்! ''என் மகன் அவனுக்குப் பதிலாக அழட்டும். பரவாயில்லை. என் மகனும் மற்றக் குழந்தைகள் மாதிரியே வளர விரும்புகிறேன்!'' என்றார் நைஜாம் மன்னர்.



ஒரு ராஜா வீட்டுக் குழந்தைகளுக்குப் பறவை இனத்திடம் இத்தனை ஆசை என்றால் ஒரு சாதாரணக் குடிமகனின் குழந்தைகள் தங்கள் ஆசையை எப்படி நிறைவேற்றிக் கொள்வது?

எல்லோரும் 'இந்நாட்டு மன்னர்'களின் குழந்தை. குதூகலமாக வன விலங்குகளையும், பறவைகளையும் கண்டு களிக்க ஒரு மிருகங்கள் கண்காட்சி ஹைதராபாத்திலேயே உள்ளது! அதுவும் குழந்தைகளுக்குப் பிரியமான நேரு மாமாவின் பெயரிலேயே இந்த நேரு மிருகக் காட்சிச் சாலை இருக்கிறது !

நேரு மாமா என்றால் குழந்தைகளுக்குப் பிரியம். அவருக்குக் குழந்தைகளிடம் அளவற்ற ஆசை. நேருஜி பிரதம மந்திரியாக இருந்த காலத்திலே இரும்பு மனிதர் பட்டேல் உள்நாட்டு மந்திரியாக இருந்தார். அவர் ஹைதராபாத் ராஜ்யத்தை இந்தியாவோடு இணைத்தார். இன்று ஹைதராபாத் ஆந்திர ராஜ்யத்தின் தலைநகர்.

இந்த ஆந்திரப் பிரதேசத் தலைநகரில் நம் இந்தியாவே பெருமைப்படும்படியாக ஒரு மிருகக் காட்சி சாலை இருக்கிறது. நேரு மிருகக் காட்சி பூங்கா 1963ம் வருஷம் உருவாக்கப்பட்டு. இன்று முந்நூறு ஏக்கர் நிலத்தில் தென் கிழக்கு ஆசியாவிலேயே மிகப் பெரிய மிருகக் காட்சிச் சாலை என்ற பெயரைப் பெற்றிருக்கிறது. சிங்கம், புலி, கரடி, மான் என்று பல வகை மிருகங்களும், பட்சி வகைகளும் மீன் வகைகளும் உங்களை மகிழ்ச்சியோடு வரவேற்கக் காத்திருக்கின்றன. உலகில் நான்கு கொம்புகள் உள்ள ஒரே மிருகமான சௌசிங்காவைக் காணலாம் இங்கே. அஸ்ஸாமில் அபூர்வமாகக் காணப்படும் காண்டாமிருகம் ஜோடியாக உங்களுக்குக் காட்சி தருகின்றது. மான்களில்தான் எத்தனை வகை குதி போடுகின்றன! குரங்குக் கூட்டம் உங்களுக்கு வேடிக்கை காட்டப் பவனிவருகின்றது. புலிகள் சீறிக் கொண்டு பயமுறுத்த வருகின்றன. ஒரே

வேடிக்கை! ஆனந்தம், நேரம் போவதே தெரியாது! காலை 8.30 மணியிலிருந்து மாலை ஐந்தரை வரை இயங்கும் இந்த நேரு மிருகக் காட்சி சாலையில் குழந்தைகளாகிய நீங்கள் நுழைவதற்குக் கட்டணம் இருபத்தைந்து பைசா. முதியவர்களுக்கு ஐம்பது பைசா.



உங்கள் பெற்றோருடன் வந்தால் உங்களைத் தன்னிச்சையாகத் திரியும் மிருக ராஜாக்களின் பூங்காவில் ஒரு ரூபாய் கட்டணத்தில் கூண்டுக் காரில் பவனி வரச் சந்தர்ப்பம் கிட்டும். காருக்குப் பக்கத்தில் மிருக ராஜன் இடித்து மோதிக் கொண்டு செல்வது உங்களுக்கு மயிர்க்கூச்செரிய வைக்கும்!


சாதாரண மிருகக் காட்சிசாலை என்றால் மிருகங்களைக் கூண்டில் அடைத்து வேடிக்கை பார்க்க வைப்பார்கள். ஆனால் இங்கே வன விலங்குகளைத் தன்னிச்சையாகக் காட்டிலுள்ளதைப் போலவே திரிய விட்டிருப்பது இந்த நேருஜி வன விலங்குகள் பூங்காவின் தனி விசேஷம்!

முப்பது ஏக்கரில் உள்ள சிங்கப் பூங்கா (*Lion Safari Park*) தென்கிழக்கு ஆசியாவிலேயே முதன்மையானது. இந்த மாதிரி சிங்கப் பூங்கா அமைக்கப் பிரிட்டனே 1966ல் முன்வந்தது. ஜப்பானும் இந்த முறையைப் பின்பற்றியது. இம்மாதிரி சுதந்திர மிருகப் பூங்காக்கள் பிரிட்டன், மேற்கு ஜெர்மனி, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளில் பிரபலமாகியுள்ளன.

இவை தவிர மீன் குளங்கள், மியூசியம், குழந்தைகள் பூங்கா ஆகியவை உங்களைக் குதூகலப்படுத்த இருக்கின்றன. இத்தனை தூரமும் எப்படி நடப்பது என்று அயர வேண்டாம். நேரு மிருகக் காட்சிச் சாலையைச் சுற்றிக் குழந்தைகள் ரயில் வண்டி பவனி வந்து கொண்டேயிருக்கிறது!



ஹைதராபாத்போனால் குழந்தைகளாகிய உங்களைக் கவர நேரு மிருகக் காட்சிச் சாலை இருக்கிறது என்பதை மறந்து விட வேண்டாம்!







மூன்று ஆசைகள்

இரா. வசந்தராசன்

வெகு காலத்துக்கு முன் மருதூர் என்ற ஊரிலே கந்தன் என்ற ஒரு சிறுவன் வசித்து வந்தான். அவனுக்குத் தாய் தந்தையர்கள் கிடையாது. அந்த ஊரிலேயே மிகவும் ஏழை கந்தன்தான். கந்தன் ஒரு கீரிப்பிள்ளையை வளர்த்து வந்தான். அந்தக் கீரிப்பிள்ளை எவ்வளவு பெரிய பாம்பாக இருந்தாலும் அதைத் துண்டு துண்டாகக் கடித்துக் குதறிவிடும் வல்லமை பெற்றதாக இருந்தது. கந்தன் அதைத் தன் உயிரைப் போல் நேசித்தான். அவன் எங்கு சென்றாலும் அந்தக் கீரிப்பிள்ளை அவனுடன் செல்லும்.

கந்தன் நாள் முழுக்க மற்றவர்களின் நிலங்களில் கூலிக்கு வேலை செய்வான். இதனால் அவனுக்குக் கிடைக்கும் கூலியை வைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தான். ஒருசமயம் மருதூரில் மழையே பெய்யாமல் நின்றுவிட்டது. இதனால் நிலங்களில் வேலை செய்யக் கந்தனை யாரும் அழைக்கவில்லை. மழை பெய்யாததால் அந்த ஊரில் பஞ்சம் தலைதூக்க ஆரம்பித்தது. எனவே கந்தன், தன்னுடைய கீரிப்பிள்ளையை எடுத்துக் கொண்டு மருதூரை விட்டு நடக்கத் தொடங்கினான்.

இரண்டு முழு நாட்கள் பயணம் செய்த பிறகு தேவபுரி என்ற நாட்டை அடைந்தான். அந்நாட்டு அரசரின் பெயர் குணசீலன். கந்தன் தன்னுடைய கீரிப்பிள்ளையுடன் தேவபுரியில் உள்ள தர்மச் சத்திரம் ஒன்றில் தங்கினான்.

இரவில் அந்தத் தர்ம சத்திரத்தில் சாப்பிட்டு விட்டு, அங்கிருந்த ஒரு காவலனை நோக்கி, ''ஐயா! இந்த ஊரில் ஏதாவது சிறப்பான செய்தி உண்டா?'' என வினவினான். அதற்கு அந்தக் காவலன், ''அதை ஏன் கேட்கிறாய் தம்பி, சில மாதங்களுக்கு முன் இந்த ஊரில் கடுமையான தண்ணீர்ப் பஞ்சம் தோன்றியது. அதை நீக்குவதற்காக அரசர் ஊரின் எல்லையில் உள்ள ஆல மரத்துக்குப் பக்கத்தில் ஒரு பெரிய குளம் வெட்ட ஆரம்பித்தார். வெட்ட ஆரம்பிக்கும்போதே, ஆலமரத்திலிருந்து, 'குளத்தை வெட்டாதே! வெட்டினாலும் தண்ணீர் வராது!' என்று ஒரு குரல் கேட்டதாம். அரசர் அதைப் பொருட்படுத்தாமல் குளத்தை வெட்டும்படிச் செய்தார். எவ்வளவு வெட்டியும் குளத்தில் தண்ணீர் வரவில்லை. இதனால் மனக் கவலையுற்ற அரசர் தற்பொழுது நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் இருக்கிறார். குளத்தில் நீர் வரும்படிச் செய்பவருக்குப் பத்தாயிரம் பொன் பரிசுத் தருவதாக அறிவித்திருக்கிறார். பரிசுத் தொகை பத்தாயிரம் பொன் இன்னும் யாருக்கும் கிடைக்கவில்லை'' என்று அந்த காவலன் கந்தனிடம் தெரிவித்தான். ஆசை கந்தன் மனத்தில் எழுந்தது. ஆனால் நீரை எப்படி வரவழைப்பது?

மேலும் சில நாட்கள் தேவபுரியிலேயே கழித்த கந்தன், தன்னுடைய கீரிப்பிள்ளையை எடுத்துக் கொண்டு தேவபுரியின் அண்டை நாடாகிய வைசாலி என்ற நாட்டை நோக்கிச் சென்றான். வைசாலி நாட்டு அரசரின் பெயர் விஜயபாலன். வைசாலி நாட்டை அடைந்த கந்தன் இரவு வந்தபோது, ஓர் ஒதுக்குப்புறமாக இருந்த வீட்டுத் திண்ணையில் படுத்துக் கொண்டான். எதிர்ப்புறம் இருந்த திண்ணையில் ஒரு வயதான மனிதர் படுத்துக் கொண்

டிருந்தார். வைசாலி நாட்டைப்பற்றியும், மக்களைப் பற்றியும் அறிய விரும்பிய கந்தன், அந்த வயதான மனிதரை நோக்கி, ''ஐயா, இந்த ஊரில் ஏதாவது முக்கியமான செய்தி உண்டா?'' என்று வினவினான்.

அதற்கு அந்தப் பெரியவர், ''தம்பி! இந்த ஊர் அரசருக்கு ஒரே மகள். அவள் பெயர் மஞ்சுளா. இளவரசி மஞ்சுளா



முதலில்நன்றாகவே இருந்தாள். ஆனால் வயதுக்கு வந்த பிறகு திடீரென்று பகலில் கண் தெரிவதில்லை. இரவில் மாத்திரம் கண்கள் நன்றாகத் தெரிகின்றன. இதனால் கவலையுற்ற அரசர், இளவரசியின் பார்வையைச் சரிப்படுத்தும் மனிதனுக்குப் பாதி ராச்சியத்தையும், இளவரசியையும் கொடுப்பதாய்ப் பறையடித்துத் தெரிவித்தார். அவ்வாறு செய்த உடனேயே அரசரின் தோட்டத்தில் உள்ள ஒரு மாமரத்தில் இரவு பன்னிரண்டு மணிக்கு 'உன் மகளின் நோயை நான் குணப்படுத்தட்டுமா? நான் குணப்படுத்தட்டுமா?' என்று மூன்று முறை குரல் கேட்கிறதாம். ஆனால் மரத்தில் இருப்பது பேய், பிசாசாக இருந்தால் என்ன செய்வது என்ற அச்சத்தில் அரசர் ஒன்றும் அதற்குப் பதில் கூறவில்லை..

யாராவது ஒரு மானிடன் வந்து இளவரசியைக் குணப்படுத்துவான் என்ற நம்பிக்கையில்தான் அரசர் இன்னும் இருக்கிறார்'' என்று கூறினார்.

இந்தச் செய்தியைக் கேட்ட கந்தனுக்கு இப்படிக்கூட இருக்க முடியுமா? என்று வியப்பாக இருந்தது. மேலும் சில நாட்கள் வைசாலியிலேயே கழித்த கந்தன், அடுத்த நாட்டுக்குத் தன்னுடைய ஊரிப்பிள்ளையுடன் கிளம்பினான். அடுத்த நாட்டுக்குப் போவதற்கு ஒரு பெரிய காட்டைக் கடந்து செல்ல வேண்டும். கந்தனும் தைரியமாகக் காட்டுக்குள் நுழைந்து நடக்க ஆரம்பித்தான். நடுக் காட்டை அடைந்தபொழுது திடீரென்று மழை வரும்போல இருந்தது. கந்தன் அருகில் இருந்த ஒரு மரத்தின் மீது ஏறி எங்காவது ஒதுங்குவதற்கு வசதியான இடம் இருக்குமா என்று கவனித்தான். அப்பொழுது சற்று அருகாமையில் பிரகாசமான ஓர் அரண்மனை தெரிந்தது. காட்டிலே காணப்பட்ட அரண்மனையைக் கண்டவுடன் கந்தனுக்கு வியப்பாகவும் பயமாகவும் இருந்தது. அதனுள் போகலாமா, வேண்டாமா என் யோசித்துக் கொண்டிருக்கும் போதே மழைத் தூறல் போட ஆரம்பித்தது. தூறலைத் தொடர்ந்து பெரும் மழை வரும் என்பதை வானத்தை நோக்கிய கந்தன் கண்டு கொண்டான். நடப்பது நடக்கட்டும் எனக் கந்தன் துணிந்து அரண்மனை அருகே சென்றான். வெளியே இருந்து பார்த்தபொழுது அரண்மனைக் குள்ளே ஜகஜ்ஜோதியாக விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. உள்ளே இருந்து எவ்விதமான ஒலியும் கேட்கவில்லை.

படிக்கட்டின் மேல் அவன் காலை வைத்த உடனேயே ஒரு பயங்கர உருவமுடைய அரக்கி அங்கே தோன்றினாள். அவளுடைய முகத்தில் ஒரே ஒரு கண் மாத்திரம்தான் இருந்தது. அவளுடைய உருவத்தைக் கண்டவுடன் கந்தனுக்குப் பயத்தால் உடல் நடுங்கியது. மயக்கமாகிக் கீழே விழுந்து விட்டான். மயக்கம் தெளிந்து எழுந்தபொழுது தான் ஒரு படுக்கையில் இருப்பதையும், தனக்கு எதிரே அந்த ஒற்றைக் கண் அரக்கி சோகமே வடிவாக அமர்ந்து இருப்பதையும் கண்டான். அவள் கந்தனைப் பார்த்து, ''பயப்படாதீர்கள். உண்மையில் நான் அரக்கியல்ல. நான் ஓர் இளவரசி. என்னுடைய பெயர் சாருமதி. என்னுடைய தந்தை சத்தியபுரியின் அரசர் சத்தியநாதர். என்மேல் ஆசை கொண்ட, இந்த அரண்மனைக்கு அதிபதியான அரக்கன் ஒரு நாள் என்னைக் கவர்ந்து கொண்டு இங்கு வந்து விட்டான். பிறகு தன்னை மணக்குமாறு என்னை வேண்டினான். நான் அவனை மணக்க மறுத்ததால், என்னை இம்மாதிரிக் குரூபியாக்கிவிட்டான். நான் பழைய உருவத்தை அடைய வேண்டுமானால் இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று அந்த அரக்கனை மணந்து கொள்ள வேண்டும், அல்லது யாராவது அவனைக் கொல்ல வேண்டும். அவனைக் கொன்று விட்டால் அவனால் உண்டாக்கப்பட்ட மந்திர சக்திகள் என்னை விட்டு நீங்கி விடும். நானும் பழைய உருவத்தை அடைந்து விடுவேன். ஆனால் அவனைக் கொல்வது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல.

''இந்த அரக்கன் மகா புத்திசாலி. இந்த உலகத்தில் உள்ள எல்லா விஷயங்களும் தெரிந்தவன். எந்த உருவத்தையும் எடுக்கும் சக்தி உடையவன். இவன் அரக்க ரூபத்தில் இருக்கும்வரை இவனை யாரும் கொல்ல முடியாது. இவைகள் எல்லாம் நான் என்னுடைய நாட்டில் இருந்தபோது எங்கள் அரசவை ஜோசியர் கூறியவையாகும்'' என்று கூறினாள்.

இதைச் சொல்லி முடிக்கும்போது, கடகடவென்று ஒரு பயங்கர ஒலி கேட்டது. கண் மூடிக் கண் திறக்கும் நேரத்தில் கந்தனுக்கு எதிரே ஒரு பயங்கர அரக்கன் தோன்றினான். அவனுக்கும் நெற்றியில் ஒரே ஒரு கண்தான் இருந்தது. கந்தனைக் கண்டவுடன் அந்த அரக்கனின் ஒற்றைக் கண் கோபத்தில் சிவந்தது. ''அடே மானிடப் பதரே! நீ எப்படி இங்கே வந்தாய்? இதோ இன்னும் சிறிது நேரத்தில் உன்னை விழுங்கப் போகிறேன்'' என்றான். அரக்கனைப் பார்த்தவுடனேயே அரக்கி வடிவத்தில் இருந்த இளவரசி மயங்கிக் கீழே விழுந்து விட்டாள்.

கந்தனும் தன்னுடைய இறுதிக்காலம் நெருங்கி விட்டது என்பதை உணர்ந்தான். இருந்தபோதிலும் தன்னுடைய புத்தி கூர்மையைப் பயன்படுத்தி தப்புவதற்கு முயற்சி செய்யலாம் என்ற எண்ணத்துடன், அரக்கனை நோக்கி, ''ஐயா, இந்த இடத்துக்கு வந்தால் மரணம் நிச்சயம் என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் நான் இங்கு வந்திருக்கிறேன் என்றால் அதற்குக் காரணம் என்னுடைய உள்ளத்தில் மூன்று ஆசைகள் உள்ளன. அவைகளை அடைய நான் இதுவரை எவ்வளவோ முயன்று இருக்கிறேன். ஆனால் அவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியவில்லை. அதனால்தான் உங்களிடம்



பந்தடிக்கப் போகிறேன்
பார்புகழ ஆடுவேன்
எந்தத் துறை ஆயினும்
ஏற்றமுறச் செய்குவேன்

வண்ணப்படம் : ஆர். பரசுராம்

வந்திருக்கிறேன். அந்த மூன்று ஆசைகளை நான் அடைந்துவிட்டால் அதன் பிறகு என் உயிர் போனாலும்கூடப் பாதகம் இல்லை'' என்று பணிவுடன் கூறினான் கந்தன். அவன் பணிவு அரக்கனுக்கு அவன்பால் சிறிது இரக்கம் உண்டாக்கியது. அரக்கன் கந்தனை நோக்கி, ''நான் உன்னை விழுங்கப் போவது உண்மை. இருந்தாலும் அதற்கு முன் உன்னுடைய மூன்று ஆசைகளையும் என்னிடம் சொல். அவற்றை நிறைவேற்றி விட்டு நான் உன்னைச் சாப்பிடுகிறேன்'' என்றான்.

கந்தன் தன்னிடம் இருந்த கீரிப்பிள்ளையை எடுத்து அதை வருடிக்கொண்டே, ''ஐயா, தேவபுரி என்ற நாட்டிலே அதை ஆளும் அரசன் ஊரின் எல்லையில் உள்ள ஆலமரத்துக்குப் பக்கத்தில் ஒரு பெரிய குளம் வெட்ட ஆரம்பித்தார். வெட்ட ஆரம்பிக்கும்பொழுதே, மரத்திலிருந்து ''குளத்தை வெட்டாதே! வெட்டினாலும் தண்ணீர் வராது!'' என்ற குரல் கேட்டதாம். இதன் காரணம் என்ன? குளத்தை எவ்வளவுதான் வெட்டினாலும் தண்ணீர் வரவே வராதா? என்னுடைய முதலாவது ஆசை இதன் காரணத்தைத் தெரிந்து கொள்வதுதான்'' என்றான்.

இதைக் கேட்ட அரக்கன், ''அந்த ஆலமரத்துக்கு அடியில் ஒரு பெரிய புதையல் இருக்கிறது. குளத்தில் தண்ணீர் வந்தால் அந்தப் பகுதியில் ஜன நடமாட்டம் அதிகமாகும். ஜன நடமாட்டம் அதிகமானால், ஆலமரத்துக்கு அடியில் உள்ள புதையலை யாராவது என்றாவது கண்டு பிடித்து எடுத்துக் கொள்வார்கள். அந்த ஆலமரத்தில் உள்ள பூதம் புதையலுக்குக் காவலாக உள்ளது. அந்தப் பூதத்தினால்தான் குளத்தில் தண்ணீர் வரவில்லை. ஆலமரத்துக்கு அடியில் உள்ள புதையலை வெட்டி எடுத்து விட்டால், பூதமும் ஓடிவிடும். குளத்தில் தண்ணீரும் வந்துவிடும். சரி. உன்னுடைய இரண்டாவது ஆசை என்ன?'' என்று அரக்கன் கேட்டான்.

''வைசாலி என்ற நாட்டில் உள்ள இளவரசியின் பெயர் மஞ்சுளா. அவளுக்குத் திடீரென்று பகலில் கண் தெரிவதில்லை. அரசரின் தோட்டத்தில் உள்ள மரத்திலிருந்து 'நான் குணப்படுத்தட்டுமா ?' என்று குரல் கேட்கிறதாம். இதன் மர்மம் என்ன? இளவரசியைக் குணப்படுத்தும் வழிமுறை என்ன?'' என்று கேட்டான், கந்தன்.

இதைக் கேட்ட அரக்கன், ''அந்த மரத்தின் மேல் ஒரு பிரும்ம ராட்சதன் குடியிருக்கிறான். அவனுக்கு இளவரசியின்மேல் ஆசை. அவனுடைய மந்திரத்தினால்தான் இளவரசிக்குப் பகலில் கண் தெரிவதில்லை. அரசன் தன்னைக் குணப்படுத்தச் சொன்னால், மந்திரத்தினால் குணப்படுத்தி விட்டு தானே இளவரசியை மணந்து கொள்ளலாம் என்பதால் இரவில் அவ்வாறு குரல் கொடுக்கிறான். இளவரசியைக் குணப்படுத்த வேண்டுமானால், பிரம்ம ராட்சதன் குடியிருக்கும் மரத்தை வேரோடு வெட்டி அதை எரித்துவிட வேண்டும். பிரம்ம ராட்சதன் ஓடிவிடுவான். இளவரசியும் குணம் அடைந்துவிடுவாள்'' என்றான். ''உன்னுடைய கடைசி ஆசையைச் சீக்கிரம் சொல்லு. எனக்குப் பசி எடுக்கிறது'' என்று அரக்கன் கந்தனை அவசரப் படுத்தினான்.

''தாங்கள் நினைத்த உரு எடுக்கும் வல்லமை வாய்ந்தவர் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். எனக்குச் சில நாட்களாக ஐந்து தலை உள்ள பாம்பைப் பார்க்க வேண்டும் என்று ஆசை. ஆனால் நாட்டில் ஒரு தலை உள்ள பாம்பைத்தான் பார்க்க முடிகிறது. எனவே

தாங்கள் தங்கள் உரு மாறும் தன் மையைப் பயன்படுத்தி சிறிய ஐந்து தலைப் பாம்புக் குட்டியாக மாறி என் னுடைய கடைசி ஆசையையும் நிறை வேற்றுங்கள். அதன் பிறகு நீங்கள் என்னை என்ன செய்தாலும் கவலை இல்லை'' என்றான்.

''அப்படியா? இதோ என்னை நன் றாகக் கவனி!'' என்று சொல்லிவிட்டு ஏதோ சில மந்திரங்களை அரக்கன் சொல்ல ஆரம்பித்தான். அடுத்த நிமிடம் அரக்கன் இருந்த இடத்தில் ஒரு சிறிய ஐந்து தலை உடைய பாம்புக் குட்டி இருந்தது. பாம்புக் குட்டியைக் கண்டவுடனேயே கந்தனின் கையில் இருந்த கீரிப்பிள்ளை ஒரே தாவாகத் தாவி அந்தப் பாம்புக் குட்டியைக் கடித்து இரண்டு துண்டுகளாகக் குதறி விட்டது. அரக்க வடிவத்தை விட்டு பாம்பு வடிவத்தில் இருந்ததால், அரக்கன் உடனே இறந்து விட்டான். அவன் இறந்த உடனேயே, அரக்கி வடிவில் இருந்த இளவரசி சுய உருவம் அடைந்தாள். மூர்ச்சை யுற்று இருந்த இளவரசியை எழுப்பி நடந்ததைச் சொன்னான் கந்தன். அவள் அதைக் கேட்டு மிகவும் மகிழ்ந்து, தன்னைக் காப்பாற்றிய கந்தனே தன்னை மணந்து கொள்ளவேண்டுமென்று நாணத்துடன் வேண்டினாள்.

கந்தனும் அவளையே மணந்து கொண்டு சில நாட்கள் அந்த அரண் மனையிலேயே இன்பமாக இருந்தான். பிறகு இருவரும் அந்த அரண்மனையில் இருந்த விலை உயர்ந்த பொருட்களையும் கீரிப்பிள்ளையையும் எடுத்துக் கொண்டு வைசாலி நாட்டை நோக்கிச் சென்ற னர். அங்கு அரசனைக் கண்டு, தோட் டத்தில் உள்ள குரல் கேட்கும் மாமரத்தை எரித்துச் சாம்பலைத் தண்ணீரில் கரைத்து விடும்படி கூறி னான். அரசனும் அவ்வாறே செய்தான். இவ்வாறு செய்தவுடன் இளவரசி மஞ் சுளாவுக்குப் பகலிலும் கண் தெரிய ஆரம்பித்தது. இதனால் மகிழ்ச்சி அடைந்த அரசன் விஜயபாலன் பாதி ராஜ்யத்தையும், இளவரசி மஞ்சுளா வையும் கந்தனுக்குத் தர முன்வந் தான். ஆனால் கந்தன் இளவரசியை மாத்திரம் மணந்து கொண்டான். ராஜ்யத்தை அரசன் விஜயபாலனையே நிர்வகிக்கும்படி கூறிவிட்டான்.

சில நாட்கள் கழித்த பிறகு, கந்தன், இரண்டு இளவரசிகளுடனும் தன்னு டைய கீரிப்பிள்ளையுடனும் தேவபுரி நாட்டை நோக்கிச் சென்றான். அங் கிருந்த அரசன் குணசீலனை நோக்கி, ஆலமரத்துக்கு அடியில் உள்ள புதை யலை வெட்டி எடுத்து விட்டால் குளத் தில் தண்ணீர் வரும் என்றான். அதன் படியே அரசனும் செய்தான். புதையலை வெளியே எடுத்தவுடனேயே குளத்தில் நீர் பெருக ஆரம்பித்தது. இதனால் பெரும் மகிழ்ச்சி அடைந்த அரசன் குணசீலன் புதையலில் பாதியையும், பத்தாயிரம் பொன்னையும் கந்தனுக் குப் பரிசாக அளித்தான்.

பிறகு வைசாலியில் இருந்து, இரண்டு இளவரசிகளுடனும், பெரும் பொருளு டனும் தன்னுடைய சொந்த ஊராகிய மருதூருக்குச் சென்றான். பெரும் செல் வந்தனைத் திரும்பிய கந்தனை ஊரில் உள்ள அனைவரும் மரியாதையுடன் வர வேற்றனர். அங்கு பல தான தருமங்கள் செய்து, இரண்டு மனைவிகளுடனும், அவ்வளவு செல்வத்துக்கும் காரணமான தன்னுடைய கீரிப்பிள்ளையுடனும் கந்தன் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தான்.

துப்பறியும் ஷாம்பூ !

ஒரு நாள் பிற்பகல் என் மாமா தூங்கிக் கொண்டிருந்தார். வீட்டில் மற்ற எல்லோரும் வெளியில் சென்றிருந்தார்கள். எனக்குப் பொழுது போக வில்லை. என்ன விஷமம் செய்யலாம் என யோசித்தேன். வீட்டில் வைத்திருந்த 'ஷாம்பு'வை எடுத்துத் தேங்காய் எண்ணெய் பாட்டிலைப் போலவே வைத்திருந்த மற்றொரு பாட்டிலில் ஊற்றி வைத்துத் தேங்காய் எண்ணெய் பாட்டிலை மறைத்து வைத்து விட்டேன். மாமா எழுந்ததும் அந்த ஷாம்புவைக் கையில் ஊற்றித் தலை யில் தேய்த்துக் கொண்டார். எப்பொழுதும் மாமா தலைவாரிக் கொள்ளும்போது தலைமயிர் படிவதற்காகச் சிறிது தண்ணீரைத் தலையில் தெளித்துக் கொள்வார். அன்றும் அப்படியே செய்தவுடன் தலையில் 'குபுகுபு' என்று நுரை பொங்கத் தொடங்கியது. அச்சமயத்தில் என் மாமாவின் ஆபீஸ் நண்பர்கள் வந்தனர். மாமாவைப் பார்த்து அவர்கள் அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தனர். நான் சிரிப்பை அடக்க முடியாமல் அவ்விடத்தை விட்டு ஓடிவிட்டேன்.

— ஆர். பி. ராதா, ராசிபுரம். (வயது பதிமூன்று)


"போவலிக்கு இன்னும் எவ்வளவு நாள் இருக்கு?"
"அது டீக்குடா ரொம்ப நாட்கள். ஏன் கேட்கிறாய் ?"
"எப்போதிருந்து நல்ல பையன்களாக இருக்க ஆரம்பிக்கலாம் என்றுதான் !"
தந்தை: ஒரு மாதம் முன்னே அந்தக் கோடி வீட்டுப் பையன் உன்னைக் காண்டா மிருகம் என்று திட்டிய தற்கு இப்போது ஏண்டா குதிக்கிறே ?
மகன் : நேற்றுத்தானே மிருகக் காட்சி சாலையில் நான் காண்டா மிருகத் தைப் பார்த்தேன் !
"நான் எல்லா ஆஸ்பத்திரிக்கும் போயிருக்கேண்டா."
"பின்னே பிறக்கிற ஆஸ்பத்திரிக்கு ?"
"ஓ! நான் அங்கேதான் பிறந்தேன் !"
சிரிக்கச் சிரிக்க....
ஒரு மகாராஜாவைக் காண வந்திருந்தார் அவரது வெள்ளைக்கார நண்பர்.
"ஓ, வொண்டர்ஃபுல்! புலியையும், ஆட்டையும் ஒரே கூண்டில் வளர்க்கிறீர்களே!" என்று வியந்தார் துரை
"ஓ! அதுவா? அது மிகவும் சுலபம். நான் தினமும் ஒரு புது ஆட்டைக் கூண்டுக்குள் விட்டு விடுவேன்" என்றார் மகாராஜா.
"தலை வழுக்கையாயிண்டே வரதே தாத்தா !"
"ஆமாண்டா கண்ணு !"
"வழுக்கையானதுக்கப்புறம் தலை என்னவாகும் ?"
"ஒவ்வொரு தடவையும் எங்கள் தாத்தாவின் துப்பாக்கியைப் பார்க்கும்போது, 'நாமும் ஏன் மிலிடெரியில் சேரக் கூடாது?' என்று ஓர் ஆர்வம் கிளம்பும்."
"சபாஷ்! அப்படித்தான் ஆர்வத்தை வளர்த்துக்கணும்."
"ஆனால் என் தாத்தாவின் மரக் காலைப் பார்த்த உடனே மிலிடெரியே வேண்டாம்னு தோன்றிவிடுகிறது !"


அகல்யாபாய்

கௌசிகன்

அப்போது அவளுக்கு ஒன்பது வயது. அகல்யா என்று பெயர். புராணத்திலே வரும் அகலிகை எப்படிப் புகழ் பெற்றவளோ, புனிதமானவளோ அதே மாதிரிப் புகழ் பெற்றாள் இந்தப் பெண் அகல்யாவும். புண்ணியாத்மாவாக வாழ்ந்தாள். ஆனால் அந்த அகலிகை ரிஷி பத்தினி. இந்த அகல்யாவோ அரசபத்தினி, ராஜமாதா. பெயர்ப் பொருத்தத்தினால்தானோ என்னவோ அந்த அகலிகை பட்ட கஷ்டங்களைப் போலவே இந்த அகல்யாவும் வேதனையிலே, துக்கத்திலே, துயரிலே கிடந்து உழன்றாள். ஆனால் அகலிகையைப் போலவே உன்னத நிலைக்கும் உயர்ந்தாள். கணவனுக்குப் பணிவிடை செய்வதையே பாக்கியமாக, பவித்திரமாகக் கருதியவள் ரிஷிபத்தினி அகலிகை. ராஜ மாதா அகல்யாபாய் நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் சேவை செய்வதற்காகவே தன் தேகத்தைத் தீக்கிரையாக்காமல் காப்பாற்றிக் கொண்டாள்.

சிவாஜி மாகராஜாவுக்கு பிறகு மகாராஷ்டிரத்தை ஆண்ட மன்னர்களுக்குப் பேஷ்வாக்கள் என்று பெயர். ஒரு சமயம் பேஷ்வாவின் படைகள் அவுரங்காபாத் ஜில்லாவிலுள்ள சாடே என்ற சின்னஞ் சிறு கிராமத்துக்கருகில் முகாமிட்டிருந்தது. அந்தக் கிராமத்தில் மனகோஜி ஷிண்டே என்று ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு ஒரு பெண். அவள்தான் இந்த அகல்யா. துருதுருவென்றிருப்பாள். பேசும் விழிகள் என்பார்களே அப்படிப்பட்ட கண்கள். ஆனால் ரொம்ப அழகி என்று சொல்ல முடியாவிடினும் ஏதோ ஒரு கவர்ச்சி அந்தக் குழந்தைப் பெண்ணிடம் இருந்தது. குழந்தையின் கலகலப்பான சுபாவத்தையும் சுறுசுறுப்பையும் கண்டார் பேஷ்வா. அவளை ரொம்பப் பிடித்துப் போய் விட்டது அவருக்கு. அந்தக் குழந்தையை நல்ல இடத்தில் மணம் செய்து வைத்து நல்வாழ்வு அளிக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டார். அந்த அளவுக்கு அகல்யா பேஷ்வாவின் உள்ளத்தைக் கவர்ந்த குழந்தையாக இருந்தாள்.


மன்னர் பேஷ்வாவின் படைகளிலே எவ்வளவோ வீரர்கள்; சர்தார்கள். அவர்களிலே மல்ஹார ராவ் என்பவர் பேஷ்வாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானதொரு சர்தார். பேஷ்வாவின் கூடவே வந்திருந்தார். அவருக்கு கந்துஜி என்று ஒரு மகன். பேஷ்வாவின் கவனம் கந்துஜியின் மீது சென்றது. 'இந்தச் சூட்டிகையான துடிப்பான பெண்ணைக் கந்துஜிக்கு மண முடித்து வைத்தால் என்ன?' என்று நினைத்தார். மன்னர் நினைத்தால் அது நடக்காது இருக்குமா? மல்ஹார ராவ்



தான் மறுக்க முடியுமா? அகல்யா பாயை கந்துஜிக்கு மணமுடித்து வைப்பதென்று முடிவாயிற்று. அந்தக்காலத்திலெல்லாம் சின்னஞ்சிறு வயதிலேயே திருமணத்தை முடித்து விடுவார்கள். ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில்தான் பால விவாகம் கூடாதென்று சட்டம் கொண்டு வரப்பட்டது.

குழந்தை அகல்யா குடும்பப் பெண் அகல்யாவானாள். யாருடைய வாழ்க்கையை மகிழ்ச்சி நிறைந்ததாக்க வேண்டுமென்று மன்னர் பேஷ்வா விரும்பி இந்த ஏற்பாட்டைச் செய்தாரோ அது ஈடேறவில்லை. மல்ஹாரராவின் மகன் கந்துஜி குணங்கெட்டவனாக மாறினான். பொறுப்பில்லாத பிள்ளையாக, சுகபோகங்களிலே மூழ்கித் திளைப்பவனாக, மனைவியை மதிக்காதவனாக இருந்தான். ஆனால் அகல்யாவைக் கொடுமைப்படுத்தவில்லை. அதற்கு இடந் தரவில்லை மாமனார் மல்ஹாரராவ். மனைவி அகல்யாவிடம் அன்பும் பாசமும் கொண்ட கணவனாக நடந்து கொள்ளவில்லை கந்துஜி.

கணவன் எப்படிக் குணம் கெட்டுக் குடிகாரனாகக் கொள்கை யில்லாதவனாக வாழ்ந்தானோ, அதற்கு நேர்மாறாக நேர்மையுடன் வாழ்ந்து வரலானாள் அகல்யா. மருமகளின் புத்தி சாதுரியத்தையும் பொறுமையையும், கடமை உணர்வையும் கண்ட மாமனார் தம் ஜாகீரின் நிர்வாகப் பொறுப்புகளை



யெல்லாம் அகல்யாவிடமே ஒப்படைத்தார். சொந்த மகன் உடன் இருந்து பழகிக் கொள்ள வேண்டிய பணிகளையெல்லாம் மருமகளுக்குச் சொல்லிக் கொடுத்தார். மகனோ மதுவின் மயக்கத்திலும் மங்கையர்களின் கிறக்கத்திலும் உழன்று கிடந்தான். வரி வசூலிப்பது, படைப் பிரிவு அதிகாரிகளுக்குத் தாக்கீதுகள் அனுப்புவது ஆகிய காரியங்களைக் கூட அகல்யா பாயிடமே ஒப்படைத்தார், மல்ஹார ராவ். பல

சமயங்களில் படையினருடன் தம் மருமகளையும் போர்க்களத்துக்கு அழைத்துப் போவார்.

அப்படி ஒரு சமயம் அகல்யா தம் மாமனாருடன் போர்க்களத்துக்குப் போயிருந்த போதுதான் அந்த விபரீதம் நிகழ்ந்தது. பேஷ்வாவின் சகோதரர் ரகோபா, கும்பேரிக் கோட்டையை முற்றுகை யிட்டிருந்தார். அவருக்கு உதவியாக மல்ஹார ராவ் தம் படைகளுடன் போயிருந்தார். மகன் கந்துஜியும் மருமகள் அகல்யாபாயும் அவரது படையணியுடன் சென்றிருந்தனர். பேஷ்வா ரகோபாவின் முகாமிலே ஒரு நாள் பிற்பகல் எதிரிப் படையணியிலிருந்து விசப்பட்ட பீரங்கிக் குண்டு கந்துஜியைத் தாக்கியது. மல்ஹார ராவின் ஒரே மகன், அகல்யாவின் கணவன் இறந்தான். அப்போது அகல்யாவுக்கு இருபது வயது கூட ஆகவில்லை. மலர்ந்து மணம் பரப்ப வேண்டிய மலர் போன்ற அகல்யா, கணவனை இழந்து கைம்பெண்ணானாள். அந்தக் காலத்தில் கணவன் இறந்தால் மனைவியும் அவனோடு உடன்கட்டை ஏறுவார்கள். இறந்த கணவனின் சிதையிலே உயிரோடுள்ள மனைவியும் போய் விழுந்து தன் உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டும். அது பத்தினிப் பெண்களின் பண்பாடாகக் கருதப்பட்ட காலம். பிற்காலத்தில் இந்த உடன்கட்டை ஏறும் கொடிய பழக்கத்தை ஆங்கிலேயர், பாரதத்தில் தோன்றிய சமூக சீர்திருத்த வாதிகளின் உதவியோடு ஒழித்தார்கள். ஆனால் அகல்யா பாய் வாழ்ந்ததோ இத்தகைய செயலைப் புனிதமாகப் புண்ணியமாகக் கருதிய காலத்தில். ஆகவே அகல்யா பாய் கணவனுடன் உயிர் துறக்கச் சித்தமானாள். மனைவியுடன் பாசமும் நேசமுமாக வாழா விட்டாலும் கந்துஜி அகல்யாவை இரண்டு குழந்தைகளுக்குத் தாயாக்கி இருந்தான். மகனின் பெயர் மலேராவ். மகளின் பெயர் முக்தா பாய். மருமகளின் முடிவைக் கேட்ட மாமனார் மல்ஹார ராவ் துடித்துப் போனார்.

''அம்மா! அகல்யா! எனக்கு மகன் நீதான். 'என் மகன் கந்துஜி உயிரோடிருக்கிறான். அவன் மனைவி அகல்யா தான் இறந்து விட்டாள்.' நான் இந்த மாதிரித்தானம்மா எண்ணிக் கொண்டிருக்கிறேன். நீ என் மகனாகத்தானே என் காரியங்களிலும் கடமைகளிலும் பங்கு கொண்டு வருகிறாய். வயது காலத்தில் இந்தக் கிழவனை யாருமற்ற அநாதையாக்கி விட்டுப் போய் விடாதே குழந்தே! எனக்காகவும் உன் இரு செல்வங்களுக்காகவும் நீ உன் கணவனுடன் உடன்கட்டை ஏறக் கூடாதம்மா'' என்று கண்ணீர் வழியக் கல்லும் உருக வேண்டிக் கொண்டார், அகல்யா பாயிடம்.

திடசித்தம் கொண்டவளானாலும், மத சம்பிரதாயங்களில் நம்பிக்கையுடையவளானாலும் அகல்யா பாயின் இதயம் மெழுகு போன்றது. தம் மாமனாரைக் கதற வைத்து விட்டுத் தாம் 'சதி'யாவதற்கு மனம் இடந் தரவில்லை. மகனே போல மதிக்கும் மாமனாருக்காக வாழ்வதென்று முடிவு செய்தாள்.

கணவன் உயிரோடிருந்த காலத்தில் அவன் அன்பைப் பெறாத அகல்யா குழந்தைகளின் முகங்களிலே அந்தக் குறையை மறந்து வாழ்ந்து வந்தாள். கணவனின் மறைவுக்குப் பிறகு தனது கவனம் முழுவதையும் ஜாகீரின் நிர்வாகத்திலே செலுத்தினாள். இயற்கையிலேயே மத விஷயங்களில் ஈடுபாடும் பக்தியும் மிக்கவள் அகல்யா. அடுத்தடுத்து வந்த துர்ப்பாக்கியங்கள் அவளிடம் கடவுள் பக்தியை அதிகமாக்கியது. வாழ்நாளின் பெரும் பகுதியைத் தியானத்திலும், பூஜையிலும், சத்விஷயங்களிலும் செலவிடலானாள்.

கணவனை இழந்த சோகம் தணிவதற்குள்ளாகவே இன்னொரு இழப்புத் தொடர்ந்தது. யாருக்காகத் தன்னுயிரை மாய்த்துக் கொள்ளாது உயிர்வாழச் சம்மதித்தாளோ அவர் - மாமனார் மல்ஹார ராவ் - மறைந்தார்.

மகன் மலே ராவை ஒப்புக்கு ஜாகீரின் சுபேதாராக்கித் தானே நிர்வாகப் பொறுப்பு முழுவதையும் மேற்கொண்டாள் அகல்யா. அகல்யா பாயின் ஆற்றலைப் பற்றி அறிந்தவர் மன்னர் பேஷ்வா. ஆகவே அகல்யா பாயின் பொறுப்பிலேயே ஜாகீர் தொடர்ந்து நிர்வகிக்கப்படுவதில் எவ்வித மாற்றத்தையும் புகுத்த விரும்பவில்லை.

அகல்யா பாய் மிகத் திறமை மிக்க நிர்வாகி. அன்பும் சமாதானமுமே தம்முடைய குறிக்கோளாக கொண்டிருந்தார். அதனால் எதற்கும் வளைந்து கொடுக்கும் கோழையுமல்ல. மாமனாருக்குப் பிறகு நிர்வாகப் பொறுப்பை ஏற்ற போது சந்திரவாத் என்ற ராஜபுத்திர இனத்தவர் அகல்யா பாய்க்கு எதிராகக் கலகம் செய்தனர். அவர்களுடைய பிரதேசத்தை சந்திரவாத் அரசர் மல்ஹார ராவ் ஆட்சிக் காலத்தில் இந்தூரோடு இணைத்துக் கொள்ளச் செய்து விட்டார். மல்ஹார ராவ்

இறந்ததும் ஹோல்கார்களின் ஆட்சியி லிருந்து விடுபட்டுச் சுதந்திரமடைய விரும்பினார்கள் சந்திரவாத் ரஜபுத் திரர்கள். அகல்யாவின் சேனாபதி துக்கோஜி ஹோல்கார் அரசாங்க அலுவ லாக வடநாட்டுக்குப் போயிருந்த வேளையில் கலகம் விளைவித்தனர் சந்திரவாத் ராஜபுத்திர இனத்தவர். கலங்கவில்லை அகல்யா. முக்கியமான படைப்பகுதி துக்கோஜியுடன் போய் இருந்த நிலையிலும் முடிந்த அளவு படைகளைத் திரட்டினாள். தாமே தலைமை தாங்கி நடத்திச் சென்று கலகக்காரர்களை அடக்கி ஒடுக்கினாள். இதேமாதிரி சாத்பூரா மாகாணத்திலும் பில் வகுப்பார் தொல்லை கொடுத்த போது அதன் தலைவனைக் கைது செய்து தூக்கிலிட்டாள். இத்தகைய கடுமை யான நடவடிக்கைகளின்பயனாக அமைதி யைக் கெடுக்கும் சக்திகளை அலமலங்க வைத்தாள். இதன் பிறகு அகல்யாவின் ஆட்சியிலே கலகமே தோன்றவில்லை.

கணவனால் இள வயதில் மன நிம்மதி இழந்ததோடு ஆண்டவன் இந்த ஆற்றல் மிக்க அணங்கிற்கு அமைதி யான வாழ்வை அளித்திருக்கலாம். ஆனால் அவன் அகல்யாவிற்குச் சோதனை மேல் சோதனைகளைக் கொடுத்து வேதனைகளையே விளைத்து வந்தான். நல்லவர்களின் கண்ணீரிலே மகிழ்ச்சி காண்பதினால்தான் கடவுள் கல்லாகக் கருவறையிலே இருக்கிறான் போலும்.

கணவனைப் போலவே ஒரே மகன் மலேராவும் திடசித்தமில்லாத வாலிப னாக வளர்ந்தான். பின்னர் சித்தம் பேத லித்து மரணத்தையும் தழுவினான். தாங்க முடியாத வேதனை. ஆனால் உதறிவிட்டு ஓடிவிட முடியாத கடமைகள். துக் கோஜி ராவ் என்ற இளைஞனைச் சுவீகா ரம் எடுத்துக் கொண்டாலும் அவனிடம் படைத் தலைமையை ஒப்படைத்தாளே தவிர நாட்டு நிர்வாகத்தைத் தானே தான் கவனித்து வந்தாள்.

அகல்யாவின் நல்வாழ்விலே அக்கறை கொண்ட மன்னர் பேஷ்வாவும் கால மானார். அவரது மகன் புதிய பேஷ்வா வானார். இப்போதுதான் அகல்யா தம் மகனை இழந்த துக்கத்தில் ஆழ்ந்திருந் தாள். மன்னரின் சித்தப்பாவான ரகோபா அகல்யாவின் மாகாணம் வாரிசில்லாத நிலையிலிருப்பதை அறிந்து அதன் மீது படையெடுத்துத் தனதாக் கிக் கொள்ள நினைத்தான். தாங்க முடி யாத துக்கத்திலிருந்தாலும் தன் மானத்தை, கௌரவத்தை இழக்க விரும் பாத அகல்யா பெண்களைக் கொண்ட தொரு படையணியைத் திரட்டி னாள். ரகோபாவிற்குத் தூதனுப்பினாள். ''என்னைப் போர்க்களத்தில் சந்திப்பதை நீங்கள் விரும்புவதாக அறிகிறேன். நான் அதற்குச் சித்தமாகவும் இருக் கிறேன். ஆனால் நான் ஒரு பெண். போரிலே நான் தோல்வியடைந்தால் அதனால் உங்கள் புகழ் ஓங்காது. ஆனால் ஒ 'வேளை நிலைமை நிங்கள் நினைப்பதற்கு ('மாறாகுபே யானால்? எண்ணிப்பார்த் துச் செயல்படுங்கள்.'' அகல்யாவின் இந்தச் சாதுரியம் நல்ல பயனளித்தது. ரகோபா தம் மனத்தை மாற்றிக் கொண்டார். தாம் துக்கம் விசாரிக் கவே இந்தூருக்கு வருவதாக அறிவித்து அதன்படியே வந்து போனார்.

வருஷங்கள் உருண்டன. ஓரளவு அமைதியாகவே கழிந்தன என்று கூற லாம். அகல்யா பாய் அனுபவித்த வேதனைகள் போதாது என்ற நினைப் புப்போலும் ஆண்டவனுக்கு. வாழ் நாளின் கடைசிக் காலமாவது மன நிறைவுடன் கழியக் கூடாதா? அகல்யா பாயைப் போன்ற ஆற்றல் மிக்க பெண் ணரசிகளுக்குத்தான் எத்தனை சோதனை களைத் தருகிறான் கடவுள். தம் ஒரே மகள் முக்தா பாய் கணவனின் சிதை யிலே எரிந்து சதியாகப் போகும் கொடு மையைக் காணவும் வேண்டி இருந்தது அகல்யாவுக்கு.

மகளின் இந்தப் பரிதாபப் பிரிவின் அதிர்ச்சியைத் தாங்கமுடியாத அளவுக்கு அகல்யாவின் உடலும் உள்ளமும் வலு விழந்து விட்டன. மூன்று நாட்கள் அரண்மனையை விட்டு வெளியே வரவே இல்லை. அந்த மூன்று நாட்களிலும் எது வும் சாப்பிடவோ யாருடனும் ஒரு வார்த்தை பேசவோ கூட இல்லை. மகளின் மறைவுக்குப் பிறகு அகல்யா ஒரு துறவியாகவே வாழலானாள். ஆண்டவனின் நினைவாகவே தியானத் திலும் மோனத்திலும் கழித்தாள்.

நாட்டிலே அவள் புகழ் சொல்லிக் கொண்டிருக்கும் படியான பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார் அகல்யா பாய். நெடுஞ்சாலைகள், கிணறுகள், சத்திரங்கள், கோயில்களை நாடெங் கும் உருவாக்கிய பெருமை அகல்யா பாய்க்கு உண்டு. யாத்திரீகர்களின் வச திக்காகக் கல்கத்தாவிலிருந்து காசிக்கு அமைத்த நெடுஞ்சாலை முக்கியமானது.

சௌராஷ்டிரத்திலுள்ள சோம நாதர் ஆலயமும் கயாவிலுள்ள விஷ்ணுவின் கோயிலும் காசியிலுள்ள விஸ்வேஸ்வரர் ஆலயமும் அகல்யா பாயின் அழியாப் புகழுக்குச் சான்று களாகும்.

ஆ!...பத்து...ஆபத்து!

கவிஞர் சிவல்புரி சிங்காரம்

வீதியின் நடுவில் நின்றபடி விளையாடுவதும் ஆபத்து !
சூதாட்டத்தை நாடுகிற சுருக்குவழியும் ஆபத்து !

அன்னை, தந்தை, ஆசானை அடக்கநினைப்பதும் ஆபத்து !
கண்ணைப்போன்ற கல்வியினைக் கற்கமறந்தால் ஆபத்து !

பெரியோர்சொல்லை மதிக்காமல் பெரும்பொய்சொன்னால் ஆபத்து!
வறியோர்வறுமை தீர்க்காமல் வாழ்வதுநமக்கு ஆபத்து!

திருட்டுத்தனமாய்ப் பிறர்பொருளைத் திருடிக்கொள்வதும் ஆபத்து !
இருட்டில்விளக்குகள் இல்லாமல் எங்கும்செல்வது ஆபத்து !

கடவுளையெண்ணா மாந்தர்க்குக் கணக்கிலடங்கா ஆபத்து !
மடமையொழிக்கார் வாழ்வினிலே மலிந்திடுமேபெரும் ஆபத்து !

படிக்கும்போதே அரசியலில் பங்குகொள்வதும் ஆபத்து !
கடிக்கும்பொருளைக் கவனமுடன் கடிக்காவிட்டால் ஆபத்து !


ஏழைகள்வயிறு எரிவதனால் என்றுமுனக்கு ஆபத்து !
கோழைகள்போலே நீவாழ்ந்தால் குவிந்திடும்ஆயிரம் ஆபத்து !

மூத்தோர்சொல்லைக் கேளாத மூர்க்கர்க்கென்றும் ஆபத்து !
சேர்க்கும்பொருளை நல்வழியில் சேர்க்காவிட்டால் ஆபத்து !

காசுக்குஆசைப் பட்டெந்தக் காரியம்செய்வதும் ஆபத்து !
மோசநாசம் செய்திட்டால் முடிவிலடைவதும் ஆபத்து !

'ஆபத்து' என்று போட்டிருந்தும் அதனைத்தொடுவது ஆபத்து !
தேகத்தைச்சுத்தம் செய்யாமல் தினமும்இருப்பது ஆபத்து !

இதனைப்படித்த பின்னாலே எறிந்துவிடுவதும் ஆபத்து !
இதனையறிந்து வாழ்வோர்க்கு எப்படிவந்திடும் ஆபத்து ?
ஆ!...பத்து!



தண்ணீர்

இறைவன் அருளால் பிறப்பெடுத்தேன் — உலகில்
என் பெயர் ''தண்ணீர்'' சிறப்பெடுத்தேன்!
குறையாப் பணிகள் பலசெய்வேன் — இடையில்
குறும்புகள் கூடச் சிலசெய்வேன்!

காவிரி கங்கை நதியாகி — வயற்
காடு செழித்திடச் செய்திடுவேன்!
ஆவி நிலையினில் முகிலாகிப் — பருவம்
அறிந்து மழையாய்ப் பெய்திடுவேன்!

ஏரி குளமென வடிவெடுப்பேன் — என்னை
எதிர்ப்பவர் உயிருக்கும் முடிவெடுப்பேன்!
பாரில் பாலை வனங்களிலும் — நான்
பாய்ந்தால் பச்சைப்பயிர் வளர்ப்பேன்!

கத்தும் கடலாய் அதிர்ந்திடுவேன் — கவலையில்
கண்ணீர்த் துளியாய் உதிர்ந்திடுவேன்!
நித்தம் உலகில் தொழிலாளி — சிந்தும்
நெற்றி வியர்வையில் முதிர்ந்திடுவேன்!

எரிக்கும் வெய்யிற் கோடையிலே — நான்



யாவரும் ஒன்றே!

கண்ணன் கறுப்பென இகழாதே,
வேலன் வெளுப்பெனப் புகழாதே
வெண்மையும் கருமையும் சரி சமமே
உண்மை யிதனை உணர்ந்திடுவாய்
கருமை நிறத்திலும் அழகுண்டு
பெருமைப் பட்டிட வழியுண்டு
உருவில் எவரும் வேருவார்
இறைவனுக் கெவரும் ஒன்ருவார்
பாலில் ஒரு துளி மோர் கலந்தால்
புளிக்கும் தயிராய் அது மாறும்
காலில் பட்ட காயமென்ருல்
கண்ணில் நீர்மழை வழியாதோ !
வேலனும் கண்ணனும் வேறல்ல
உலகில் மாவீடர் ஒரினமே !

— ஜே. கே. சிவன்



யாராவது உதவுங்கள்!

கட்டுக் கட்டாய்க் கரும்பு
கடையில் விற்கும் கரும்பு
துட்டு போட்டால் வாங்கலாம்,
துண்டாக்கித் தின்கலாம்!

சுட்டிப்பயல் சுந்தரும்
சுப்புணியும் வாங்குருன்
சின்னப்பயல் சீதரோ,
சில்லறைக்கு ஏங்குருன்!

தாத்தாகிட்டே கேட்டாச்சு,
தடுங்கிணதோம் போட்டாச்சு;
அத்தைகிட்டே கேட்டாச்சு;
அழுதுகூடப் பார்த்தாச்சு;
அம்மாகிட்டே கேட்டாச்சு,
அடம்பிடிக்கப் பார்த்தாச்சு;
அப்பாகிட்டே போனதில்
அடியுங்கூட விழுந்திச்சு

சின்னப்பயல் சீதருக்குச்
சில்லறையே கிடைக்கல்லே,
சுத்திச் சுத்திப் பார்க்கிருன்
கவத்தைப்பார்த்து ஏங்குருன்!

அஞ்சுகாசு போதுமாம்
ஆவலோடு கேக்குருன்,
ஐயோ பாவம் சீதருக்கு
ஆராவது உதவுங்கள்.

— ராஜாதி ராஜன்


சிரித்துக் குலுங்கி அருவிகளாய் மலையில்
சிறுகக் குதித்து நடைவருவேன்!


ஏழை உலகில் என் செயல்கள் — யாவும்
இறைவன் அருளின் நூதனங்கள்!
வாழை கரும்பு வளமெல்லாம் — நான்
வாரி வழங்கும் சீதனங்கள்!


ஆடிப் புதுப்புனலாய் வருவேன் — பெண்கள்
ஆரத்தி எடுத்தெனை வரவேற்பார்!
தேடிய பாவங்கள் யாவையுமே — போக்கும்
தெய்விகத் தீர்த்தமும் ஆகிடுவேன்!

ஐயன் சிவன் எனை அறிந்ததனுல் — என்
அவசியம் அவனுக்குப் புரிந்ததனுல்
வையம் புகழும் கங்கையெனும் — பெயரில்
வைத்தான் எனைத்தன் தலைமேலே!

— தஞ்சை பையா




நந்து சுந்து மந்து
15
கதை: வாண்டுமாமா
சித்திரம்: செல்லம்
மாடிபஸ் மீது குரங்குக்குட்டி பிரயாணம் செய்வதை அனுமதிப்பார்களா? விபத்து ஏற்படலாமே? ஆகவே பஸ் வழி மறித்து நிறுத்தப்படுகிறது.
இதென்னடாது பெரிய பேஜாராப் போச்சு. தெருக் காட்சிகளைப் பார்த்துக் கிட்டு கார் சவாரி செய்ய விட மாட்டானுக போலிருக்கே.
இவங்க கையிலே சிக்கினால் சிக்கல் தான். இது ஏதோ பெரிய ஹோட்டல் போலிருக்கு. இதுக்குள்ளே நுழைவோம்.
இங்கேயும் என்னைப் பின் தொடர்ந்து வருவாங்களோ? பட்டிக்காட்டான் யானையைக் கண்டாப் பிலம்பாங்க. இந்தப் பட்டணத்துக் காரங்க ளுக்கு என்னைக் கண்டா ஏன் இப்படி?
அட தேவுடா! இரண்டு பக்கத்திலு மிருந்துமல்லவா என்னை நெருக்க றாங்க....
உங்ககிட்டே மாட்டிப் பேனு?
வரு...வரு...வரா! ஊஞ்ச லாட்டமா ஜோரா ஆடுதே இந்த லஸ்தர் விளக்கு! இந்த பல்பு? அட, கொஞ்சம் திருகினாலே கையோட வருதே...சரிதான். பேசாமப்போறீங்களா, இல்லே... இதோ டமார்...! எப்படி?


மந்துவுக்கு ஒரே குஷி. லஸ்தர் விளக்கி லிருந்து ஒவ்வொரு பல்பாக எடுத்துக் கீழே வீசுகிறது. கூட்டத்தினர் பயந்து பாய்ந்து ஓடுகின்றனர். முடிவில் அதன் கனமும் ஆட்டமும் தாங்காமல் லஸ்தர் கொத்தே விதானத்திலிருந்து பெயர்ந்து...
ஐயையோ! அவர்களோ விரட்டப் போய்க் கடைசில இதுவே அறுந்துட்டுதே...
லஸ்தர் விளக்கு விழுந்ததும் மந்து வேகமாக வெளியேறுகிறது.
தப்பிச்சேன், பிழைச்சேன்...
அதே சமயம் மந்துவைத் தேடிக் கொண்டு உள்ளே நுழைகின்றனர், சுழல் கதவு வழியாக நந்துவும் சந்துவும். அந்த வேகத்தில் மந்து...
வெளியில் வந்து குப்புற விழ, அதே சமயம் வீதியில் ஒரு செல்வந்தரின் பெண் காரில் வர...
டிரைவர் காரை நிறுத்து.. அதோ ஒரு அழகான குட்டிக் குரங்கு. விளையாட அது எனக்கு வேணும்.
ஐயோ பாவம்! இத்தனை அழகான உன்னை யார் அப்படி வெளியே தூக்கி வீசினார்கள்?
சொகுசுக் காரில் திண்டிலே சாய்ந்தபடி கிடந்த மந்துவுக்கு ஆசார உபசாரம் நடக்கிறது.
இந்தா, ஜோரான சாக்லேட்! எல்லாம் உனக்குத்தான், எடுத்துக்கோ. எப்படி இருக்கு?
தொடரும்





காளான் நமக்கெல்லாம் தெரிந்த ஒன்று. இதில் கிட்டத்தட்ட எழுபத்தைந்து ஆயிரம் ஜாதிகள் உண்டு. நம் நாட்டில் 3480 ஜாதிகள் உள்ளன! நமக்கு உணவாக மட்டுமல்லாது நம் தொழில் துறைகளிலும், நம் நோய்களைப் போக்கும் மருந்தாகவும் இது பயன்படுகிறது. சில வகைக் காளான்கள் நமக்கும் வேறு பல பிராணிகளுக்கும், பல் வகைத் தாவர வகைகளுக்கும் நோயை உண்டாக்குகின்றன.

பயிர்களின் எதிரி

நம் நாட்டில் பயிர்களைச் சில வகைக் காளான்கள் தாக்குகின்றன. இவ்விதம் பயிர்களைத் தாக்கும் காளான்களைப் பூஞ்சக் காளான் என்று சொல்லுவார்கள். இந்த நோயால் மட்டும் நம் நாட்டில் வருடம் பத்து சத விகிதம் விளைச்சல்கள் குறைந்து போகிறது என மதிப்பிடுகிறார்கள். 1942ல் வங்காளத்தில் கொடும் பஞ்சம் தோன்றி அதனால் ஆயிரக்கணக்கான மக்கள் மடிந்து போனார்கள். அங்கு அந்த ஆண்டில் நெற்பயிர்களைத் தாக்கிய காளான் நோயின் காரணமாக விளைச்சல் வெகுவாகக் குறைந்து அதனால் உணவுப் பஞ்சம் ஏற்பட்டதுதான் இதற்குக் காரணம். பைதியம் என்ற பூஞ்சக் காளான்கள் புகையிலை, காரட்டு, முட்டைகோஸ், தக்காளி போன்றவற்றின் வேர்களை அழுக வைத்துப் பெரும் நஷ்டத்தை உண்டாக்கும்.

எரிசைபிபி கிராமினஸ் என்ற பூஞ்சக் காளான் மலைப் பிரதேசங்களில் விளையும் கோதுமை, பார்லி போன்ற பயிர்களைத் தாக்கிப் பெரும் சேதம் உண்டாக்குகின்றன. கரும்புகளின் உள்ளே சிவப்பாகச் சொத்தை ஏற்படுவதற்கும் பாயிசெலோஸ்போராட்யுடுமெனன்ஸிஸ் என்ற ஒரு வகைப் பூஞ்சக் காளானே காரணம். பயிர்களில் கரும் புள்ளி நோய் ஏற்படுவதற்கும் பழுப்புப் புள்ளி நோய் ஏற்படுவதற்கும், மஞ்சள் புள்ளி நோய் ஏற்படுவதற்கும் பல வகைப் பூஞ்சக் காளான்களே காரணம்.


மனித, மிருக எதிரி

மனிதனுக்கு நோயை உண்டாக்கும் காளான்கள் மிகக் குறைவு. அதே போல் மிருகங்களுக்கு நோய் உண்டாக்கும் காளான்களும் உலகில் அதிகமாக இல்லை.

நம் தலைமயிர் சொட்டை விழுவதற்கும் பொடுகு பொட்டுகள் ஏற்படுவதற்கும் காரணம் பிடாய்ரோ ஸ்போரம் ஓவேல் என்ற பூஞ்சக் காளானாகும். யானைக் கால் வியாதி ஏற்படக் கொசுக் கடி காரணம் என நாம் நினைக்கிறோம். ஆனால் அந்த வியாதியை நமக்கு உண்டாக்குவது எஸ்கோ மாயி கிடீஸ் வகையைச் சேர்ந்த ஒரு பூஞ்சக் காளானே ஆகும். இப்படி மனிதனைத் தாக்கும் பூஞ்சக் காளான்கள் மற்ற மிருகங்களையும் தாக்குவது உண்டு.

சில வகைக் காளான்கள் விஷத் தன்மை உடையவை. அவை தோற்றத்தில் நல்ல காளான்களை ஒத்திருப்பதால் தவறி நாம் அவற்றை உணவாகப்





பயன்படுத்தி விடுகிறோம். இத்தகைய காளான்களைச் சாப்பிட்டு விட்டால் சாக வேண்டியதுதான்.

நோய்களின் எதிரி

சில வகைக் காளான்கள் நோய்களைத் தாக்கி அழித்து நமக்குப் பெரும் நன்மைகள் புரிகின்றன. நோயை உண்டாக்கும் பூஞ்சக் காளான்களையேகூட அவை தாக்கி ஒழிக்கின்றன. ஆகவே, பயிர்களைத் தாக்கும் பலவிதப் பூஞ்சக் காளான்களைத் தாக்கி ஒழிக்க இப்போது இந்தக் காளான்களையே பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். டார்லூகான பலம் என்ற காளான் ஒட்டுண்ணிகளைப் போல் பூஞ்சக் காளானின் சாரத்தை உறிஞ்சி அழிக்கிறது. பல நுண்ணிய நோய்க் கிருமிகளையும் கூட இவை தாக்கி அழிப்பதாகச் சமீபத்தில் கண்டறிந்திருக்கிறார்கள்.

தொழில்

நமக்கு உணவாகும் காளான் வகைகளை மாவாகத் தயாரித்துக் கெடாது டப்பாக்களில் அடைத்து விற்பனை செய்வதற்கான பல தொழிற்சாலைகள் மேல் நாடுகளில் தோன்றி வருகின்றன.

கார்பானிக் அமிலங்கள், பலவித என்சைம்கள் தயாரிக்கவும், சிட்ரிக் அமிலம் தயாரிக்கவும் காளான் வகைகள் பயன்படுத்தப்படுகின்றன.

குளுசோனிக், ஆக்சலிக் லாக்டிக், காலிக், பியுமரிக், சக்சினிக், மாலிக் பார்மிக், பைருவிக், இடாகோனிக் ஆகிய அமிலங்களும்கூடக் காளான்களின் உதவியால் இப்போது தயாரிக்கப்படுகின்றன.

உணவு

காளான் மிகுந்த சத்துள்ள ஒரு மனித உணவாகும். அதில் ஐம்பத்து நான்கு சதவிகிதம் வரை புரதச் சத்து அடங்கியுள்ளது. வேறு எந்தக் காய்கறியிலோ அல்லது பழத்திலோ இவ்வளவு புரதச் சத்து கிடையாது. இதனால் இதை நோய்கள் வராது தடுக்கும் பாதுகாப்பான உணவு எனக் கூறுவார்கள். நிகோடினிக் அமிலம், ரிஃபோபிளேபன், வின்டோதெனிக் அமிலம், வைட்டமின் பீ.சி.கே.யோடு கார்போஹைட்ரேட் – சத்து இருபத்தெட்டு புள்ளி எழுபத்தாறு சதவிகிதம் அடங்கியுள்ளது. இதில் ஸ்டார்ச் பொருளே கிடையாது. இதனால் நீரழிவு நோய்க்காரர்களுக்கு இது ஒரு சிறந்த சத்துணவாகவும் பயன்படுகிறது.


மருந்துகள்

காளான்கள் பல வகை மருந்துகள் தயாரிக்கவும் வைட்டமின்கள் தயாரிக்கவும் பயன்படுகின்றன. பெனிசிலம் நோடேடம் என்ற காளானிலிருந்து பென்சிலின் மருந்து தயாரிக்கப்படுகிறது. ஸ்ட்ரெப்டோமைசின், ஓரியோமைசின் குளோரோமைசின் போன்ற வேறு பெனிசிலின் வகையைச் சேர்ந்த மருந்துகளும் காளானிலிருந்து தயாரிக்கப்படுபவையே.



மாய மோதிரம்

வாண்டுமாமா




பறக்கும் குதிரை மீது பராக்கிரமர் வந்து அரண்மனையின் உப்பரிகையிலே இறங்கினார். வழி மேல் விழி வைத்துக் காத்திருந்த ராணி பத்மினி மகிழ்ச்சியால் கண்ணீர் பார்வையை மறைக்க இரு கரம் நீட்டித் தன் கணவனை வரவேற்றாள். அவரது உடல் நலம் கேட்டாள் மனைவி. ஊர் நலம் கேட்டார் மன்னர். பிறகு உடன் வந்திருக்கும் அழகிகளைப் பற்றி அறிய விரும்பினாள் ராணி பத்மினி.

''இவர்கள் தேவ மாதர்கள். போர்க்களத்தின் அதி தேவதைகள். நம் ராஜ்யத்துக்கு எவ்விதத் தீங்கும் நேராதவாறு காக்கும் பணியில் ஈடுபடப் போகிறார்கள். ஒரு விதத்தில் இவர்களை நம் நாட்டின் காவல் தேவதைகள் என்றே கூடக் கூறலாம். சுவர்ணா நதியின் தங்கத்தினால் நமக்கு இனி எவ்விதத் தீமையும் வராமல் காப்பது இவர்கள் பொறுப்பு. இவர்களின் தலைவியின் பெயர் புவனா. வீராங்கனை. அவள் தலைமையின் கீழ் மற்றவர்கள் செயல்படுவார்கள். நம் முன்னோர்களின் தவப் பலத்தினாலும், உன்னுடைய பூஜா பலத்தாலுமே இவர்களின் உதவி எனக்குக் கிடைத்துள்ளது'' என்றார் பராக்கிரமர்.

அன்று முதல் ராஜ்யத்தின் காவல் பொறுப்பை புவனாவும் அவள் உடன் வந்தவர்களும் ஏற்றுக் கொண்டதினால் பராக்கிரமர் அமைதியாக வாழலானார். போர்க்கள நாயகிகள் ஒவ்வொரு நாளும் தங்கள் பறக்கும் குதிரைகள் மீதேறிக் கொண்டு தேச தேசங்களுக்கும் சஞ்சாரம் செய்தார்கள். போர்க் களங்களிலே வீர மரணம் அடைந்த மாவீரர்களைக் கொண்டு வந்து அவர்களுக்கு உயிரளித்து அழிவில்லாத அமரர்களாக்கிப் பராக்கிரமரின் படை வீரர்களாக்கினார்கள். இப்படி இவர்களால் உருவாக்கப்பட்ட பெரும் படை பராக்கிரமரின் சாம்ராஜ்யத்தைக் காத்து நின்றது. வீர வாழ்வு வாழ்ந்து வீர மரணமுற்ற வீரர்களின் ஆவிகளால் ஆன அதிசயப் படை கொண்டு புவனா அந்த நாட்டுக்கு எவ்விதத் தீங்கும் நேராவண்ணம் பாதுகாப்பளித்தாள். ஒவ்வொரு நாளும் பறக்கும் குதிரைப் படை விண்ணிலே பறந்து செல்லும் காட்சியும் மாலையிலே மாவீரர்களின் சக்திகளோடு அவர்கள் திரும்பி வருவதும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தன.

6

மந்திரத் தங்கத்தினாலாகிய மாய மோதிரத்தையும் மகுடத்தையும் தன் சகோதரனிடமிருந்து கவர்ந்து சென்ற சீதளன் என்னவானான்? உலகையே அடிமையாக்கித் தரும் அற்புத சக்தி வாய்ந்த அந்தப் பொருள்களோடு அவன் ஒரு பயங்கரமான மலைக் குகைக்குப் போனான். அங்கு தன்னை ஒரு ராட்சத மிருகமாக உருமாற்றிக்கொண்டான். பயங்கரமான மிருகம். காணச் சகிக்காத தோற்றம், உலோகக் கலவையினால் ஆக்கப்பட்டது போன்ற உடல். நீண்ட வால். உடலின் மேல் பக்கத்திலே ஈட்டியின் அலகுகளைப் போன்ற உறுதியான செதில்கள். பயங்கரமான வாய். அதைத் திறக்கும்போதெல்லாம் அதிலிருந்து 'குப் குப்' என்று தீ ஜ்வாலையாக நெருப்பைக் கக்கியது. எதையும் சாதித்துத் தரக்கூடிய ஒரு பொருளை அடைந்தும் இப்படி ஓர் உருவத்தை ஏன் அந்தச் சீதள அரக்-



கள் எடுத்துக் கொண்டு வாழவேண்டும்? அதுதான் விதியின் விளையாட்டு. சிலர் செல்வமிருந்தும் அதை அனுபவிக்கத் தெரியாத மூடர்களாக இருப்பார்கள். தாங்களும் அனுபவிக்காமல் பிறருக்கும் பயன்படாமல் கட்டிக் காப்பார்கள். பூதம் காத்த புதையல் யாருக்குப் பயன் படும்? அதே நிலையில்தான் சீதளனும் அந்த மாயத் தங்கத்தை இந்தப் பயங்கர உருவத்தில் கட்டிக் காத்து வந்தான். நல்ல முறையில் செல்வத்தைப் பெற்றிருந்தால் அதை நல்ல வழியில் பயனுடையதாக்க விதியும் மதியைக் கொடுத்திருக்கும். உடன் பிறந்தானைக் கொன்றுவிட்டு அடைந்த பொருளல்லவா அது? அதை இப்படித்தான் யாருக்கும் பயனற்றதாக வைத்திருக்க முடியும். தவிர சுவர்ணா நதியின் தங்கத்துக்கு அப்படி ஒரு சாபமும்கூட.

சீதளனான அந்த ராட்சத மிருகம் வசிக்கும் பிராந்தியத்தின் பக்கமே சுடு காடாகக் காட்சி அளித்தது. வெகு தூரத்துக்கு வெகுதூரம் யாரும் அணுக முடியாதபடி அக்கினியின் தகிப்பு இருந்தது. யாரும் தன்னை அணுகக் கூடாது என்பதுதானே சீதளனின் ஏற்பாடு....? அந்தப் பிரதேசத்துக்குள் தப்பித் தவறி வரும் பிராணிகள் சுருண்டு விழுந்து மடிந்தன. மனிதர்களின் நிலையும் இது தான். இப்படி இறந்தவர்களின் எலும்புகள் குவியல் குவியலாக வெய்யிலிலும் மழையிலும் காய்ந்து நனைந்து வெள்ளை வெளேர் என்று குவிந்து கிடந்தன. அந்தக் காட்சியே பார்ப்பவர்களின் குலையை நடுங்க வைக்கும்படியாக இருந்தது.

அமைதியான வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த பராக்கிரமருக்கு அது கொஞ்ச நாளில் அலுத்துப் போயிற்று. வீர வாழ்வு வாழுகின்றவர்களுக்கு வெறுமனே இருக்கப் பிடிக்குமா? துன்பங்களையும் சோதனைகளையும் வெற்றி கொண்டு மீளுவதில்தான் அவர்கள் ஆதுரம் காட்டுவார்கள். பராக்கிரமரும் அதற்கு விதிவிலக்கு இல்லையே. சீதளன் கொடிய மிருகமாக மாறி அதைக் காத்து வரும் செய்தியும் அவருக்குத் தெரியலாயிற்று. அந்தக் கொடிய மிருகத்தைக் கொன்று அது காத்து வரும் தங்கத்தை அதனிடம் இருந்து பறித்துச் சுவர்ணா நதியிலேயே அதைக் கொண்டு போய்ப் போட்டு விட வேண்டும் என்று விரும்பினார்.

ஆனால் சீதளனோடு போராடுவது யார், எப்படி?

பராக்கிரமருக்கு ஒரு மகன் இருந்தான். சத்தியசீலன் என்று பெயர். சீதளனை வெல்வதற்கான வல்லமை பெற்றவனாகத் தம் மகனை ஆக்க முடிவு செய்தார் பராக்கிரமர். கணவரின் முடிவை அறிந்த அரசி பத்மினி பதறிப் போனாள். "நம் செல்வ மகனையா அந்த மிருகத்திடம் அனுப்பப் போகிறீர்கள்?

"பதறாதே, பத்மினி!" என்று அவள் பயத்தைப் போக்க முயன்றார். ஆனாலும் பெற்ற மனம் சமாதானம் அடையவில்லை. மன்னருக்கோ மாற்றானை இதில் ஈடுபடுத்த விருப்பமில்லை. "என் மகனையே நான் இதற்காக அனுப்பினால் என்னை யாரும் குறைகூற மாட்டார்கள். கவலைப்படாதே, நம் மைந்தனுக்குத் தீங்கு நேரும் காரியத்தை நான் செய்வேனா?" என்றார் பராக்கிரமர். கணவனை எதிர்த்துப் பேசாத காரிகை மனத்துக்குள்ளேயே மருகினாள். ஏனோ அவள் உள் மனம் 'இது ஏதோ விபரீதத்துக்குத்தான்' என்று கூறியது.



இனந் தெரியாததோர் பீதியினால் அவன் உடலும் உள்ளமும் நடுங்கியது. பராக்கிரமர் தம் முடிவிலே உறுதியாக இருந்தார்.

சத்தியசீலனுக்கு அப்போது ஐந்து வயதுதான். எதையும் அறிந்துகொள்ளும் துடிப்பான மனம். எந்தக் கட்டளையையும் விளையாட்டாகவே முடிக்க வேண்டும் என்று முயற்சி செய்யும் வயது. அந்தக் கொடிய அரக்கனோடு போரிட்டு வெல்லக்கூடிய தகுதியைத் தம் மகனுக்கு உண்டாக்கிவிட முழு மூச்சோடு முனைந்தார் பராக்கிரமர். அரண்மனை வாழ்விலே அது முடியாது. சுகபோகங்களிலே வைராக்கியம் உள்ள வீர மனம் உருவாக வழியில்லை. சுற்றுச் சூழல், காட்சிகள், ஆசாபாசங்கள் இத்தனையும் அவர் கற்பனை செய்துள்ள வீரனுக்கு விரோதிகள். ஆகவே பராக்கிரமர் தன் மகன் சத்தியசீலன் வளர வேண்டிய இடத்தையே மாற்றினார். இயற்கை எழில் கொஞ்சும் ஓர் அற்புதமான கானகப் பகுதியிலே வைத்து அவனை வீரனாக்க முடிவு செய்தார். தானே தாயாகவும், தந்தையாகவும், ஆசானாகவும், ஊழியனாகவும் இருந்து அவனுக்குப் பயிற்சி அளித்து வளர்க்கத் திட்டமிட்டார். அரச வாழ்வையும் சுக போகங்களையும் அவனுக்கு மட்டுமல்லாமல், அவனுக்காகத் தானுமே தியாகம் செய்து அவனுடனேயே வாழ்ந்து வருவதென்றும் திட்டமிட்டார். மனித சந்தடியிலிருந்து பிரிந்து சென்று புதியதோர் சூழ்நிலையில் புகழ் பரப்பும் வீரனாகச் சத்தியசீலன் உருவாகத் தொடங்கினான்.

கானகத்திலே எப்படிப்பட்ட வாழ்க்கை? அங்கு பராக்கிரமர் மாளிகை கட்டினாரா? இல்லை. தான் ஒரு மன்னன் மகன் என்ற எண்ணமே தன் மகனுக்கு வரக் கூடாதென்று கானக வாசியைப் போலவே எளிமையான குடிசையில் அவன் வளர ஏற்பாடு செய்தார். முரட்டு ஆடைகளையே அவனுக்கு அணிவித்துத் தானும் அணிந்து கொண்டார். வெள்ளி நீரோடைகளின் தெள்ளிய நீரிலே குதிக்கச் செய்தார் குழந்தையை. மீன் குட்டியைப் போல நீந்தப் பழக்கினார். மழையிலே நனைந்து மகிழ்வதை அவன் விரும்பும்படி செய்தார். வெயில், பனி, காற்று, குளிர் எதையும் தாங்கும் உரம் பெற்ற உடல் அவனுக்கு ஏற்படும்படிச் செய்தார். வில், வேல், வாள் ஆகியவற்றிலே வல்லவனாகப் பயிற்சி அளித்தார். எவ்வித ஆயுதமுமில்லையா? உடனே உறுதியான ஒரு மரத்தின் கிளையை ஒடித்து அதன் இலை தழைகளைக் கழித்து நல்லதோர் கழியாக்கிக் கொண்டு எதிரியின் தாக்குதலைச் சமாளிக்கும் சிலம்பப் பயிற்சியையும் தாமே பழக்கி வைத்தார். அதுவுமே கூடக் கிடைக்காதபோது உறுதியான கைகளையே ஆயுதமாகக் கொண்டு விரோதியோடு போரிடும் மல்யுத்தக் கலையிலும் வல்லவனாக்கினார் தம் மகனை.

ஐந்து வயதுப் பாலகனாக வந்தவன் இப்போது இருபது வயதுக் காளையாக மாறியிருந்தான். ஓர் மாவீரனுக்கு உரிய அத்தனை திறமைகளையும் பெற்றவனாக விளங்கினான் சத்தியன். இதற்காக இத்தனை வருஷங்களில் அவன் எத்தனை கஷ்டங்களை மேற் கொண்டிருப்பான்? ஆனால் அவை கஷ்டம், துன்பம் என்ற நினைப்பு அவன் நெஞ்சத்திலே இடம் பெறாதபடி பார்த்துக் கொண்டார் பராக்கிரமர்.



இத்தனை ஆண்டுகளும் அவர் தம் சாம்ராஜ்யத்துக்குப் போகவே இல்லையா? போகாதிருக்க முடியுமா? அங்கும் இங்குமாகத்தான் இருப்பார். ஆரம்பத்தில் சத்தியனுக்குக் கானக வாழ்விலே ஓர் ஈடுபாடும், பழக்கமும் ஏற்படும்வரை அவனுடனேயே இருந்தார். பிறகு அவன் மட்டுமே தனித்து வாழும் தகுதியையும் மனோ நிலையையும் அவனிடம் வளர்த்து விட்டார். சில நாள் அவனை விட்டுப் பிரிந்து சாம்ராஜ்யத்துக்குப் போய் வருவார். பயமென்பதே அறியாத சத்தியன் தன்னந் தனியாகவே கானகத்து மனிதனாக வாழ்ந்து வந்தான். சத்தியனுக்கு வயது ஆக, ஆகப் பராக்கிரமர் அவனிடமிருந்து மெள்ள மெள்ள ஒதுங்கி வாழலானார். ஆனால் ஒரேயடியாக அவனைத் தனியனாக்கி விடவில்லை. அதற்குரிய தருணம் ஒன்று உண்டுதான். அது எப்போது என்பதையும் தீர்மானித்து வைத்திருந்தார். அதற்குரிய வேளை இன்னும் வரவில்லை. அதற்குள் என்னென்ன விபரீதங்கள் நிகழப் போகிறதென்பதையும் பாவம் அவர் அறியவில்லை.

சத்தியன் இப்படி மாவீரனாக வளர்ந்து வந்தான். தந்தையைக் காண வேண்டும் என்று அவன் நினைக்கும் போது அவர் தோன்றுவார். மகனுடன் சில நாள் இருந்து விட்டுப் போய்விடுவார். மற்றபடி சத்தியன் அந்தக் கானகத்தில் தன்னந் தனியனாக இயற்கையின் குழந்தையாக இஷ்டப்படி ஓடியாடித் திரிந்து வந்தான். தன் விச்சையாக, சுதந்திர வாலிபனாக, தன் சுக துக்கங்களை, தேவைகளைத் தானே சமாளித்துக் கொள்ளும் பொறுப்பு மிக்கவனாக அவன் வாழ வேண்டும் வளர வேண்டும் என்றே இப்படி அவனிடமிருந்து ஒதுங்கிப் போனார் பராக்கிரமர். ஆனால் இவ்வளவு முன்னெச்சரிக்கையுடன் எல்லாம் செய்தும் ஒன்றை மட்டும் மறந்து போனார் அவர். இல்லை; விதி அதை மறக்கும்படிச் செய்து விட்டது.

தனிமை ஒரு மனிதனுக்கு அதிக நாள் ஆனந்தத்தைத் தராது. வெறுமையையும் வேதனையையுமே அது வளர்க்கும். எவ்விதக் கஷ்டங்களையும் சமாளிக்கும் இளைஞனாகக் கானகத்திலே சுற்றிய போது ஒரு நாள் பறவைகளின் இன்னிசையோடு கலந்து வரும் ஓர் இனிய குரலைக் கேட்டான். அவன் உடலிலே இதுவரை அறியாததோர் அதிர்வு, மகிழ்ச்சி, தவிப்பு ஏற்பட்டது. மலருக்கு மலர் தாவிப் பறக்கும் வண்ணத்துப் பூச்சியைப் பிடிப்பதற்காக ஒரு பெண் சிரிப்பும் களிப்புமாக ஓடிக் கொண்டிருந்தாள். தந்தையைத் தவிர இதுவரை வேற்று மனிதர்களையே கண்டறியாத சத்தியனுக்கு அவள் உருவம், தோற்றம், அழகு, சிரிப்பு எல்லாமே புதுமையாக, மனதுக்கு இதமாக இருந்தன. அவளைப் பார்த்துக் கொண்டு அங்கேயே இருக்க வேண்டும் என்ற ஓர் ஆவலும் மேலோங்கியது. அதுநாள் வரை ஏற்படாத புதிய அனுபவம் அது அவனுக்கு.

அந்தப் பெண் கானகத்திலே இன்னொரு கோடியில் வாழும் ஓர் உழைப்பாளியின் ஒரே மகள். பூங்குழலி என்று பெயர். புத்தம் புதிய மலரின் தோற்றம். காலை இளங் கதிரவனின் வண்ணம் அவள் மேனி. மலையருவியின் சலசலப்பு அவள் சிரிப்பு. மாசு மருவற்ற வானத்திலே மினுக்கும் நட்சத்

திரங்களாக ஜ்வலித்தன அவள் கண்கள். மானைத் துள்ளி ஓடினாள்; மயிலாக ஆடினாள். மைனாவாகப் பேசினாள். குண்டு மல்லிகையின் மணம் வீசியது அவள் மேனியிலே.

எட்ட இருந்து உற்றுப் பார்த்தான் சத்தியன். ஒளிந்திருந்து அவள் ஒயிலைக் கண்டு ரசித்தான். வேலும் வாளும் வில்லுமாக வாழ்ந்தவனுக்கு அவள் சிரிப்பும் ஒய்யாரமும் ஓட்டமும் மகிழ்ச்சிக் கிளுகிளுப்பை ஏற்படுத்தின. அந்தப் புதிய உணர்விலே சொக்கிச் சுகங் காணலானான். எதிலிருந்து அவனை விலக்கி வளர்க்க வேண்டுமென்று பராக்கிரமர் விரும்பினாரோ அந்தச் சூழலிலேயே போய்ச் சிக்கிக்கொண்டான் சத்தியன். சொக்கத் தங்கத்தின் சாபம் யார் யாரை எப்படி யெப்படி யெல்லாம் ஆட்டி வைக்கப் போகின்றதோ யார் கண்டார்கள்?

ஒரு நாள் அந்த அழகியின் முன்னால் போய் நின்றான் சத்தியன். கம்பீரமான கட்டிளங் காளையாக, பரந்த தோள்களும் நிமிர்ந்த பார்வையுமாக ராஜ கம்பீரத்துடன் தன் முன்னால் தேவ குமாரனைப் போல ஓர் ஆண் அழகன் வந்து நின்றால் குமரிப் பெண் என்ன செய்வாளோ அதையே பூங்குழலியும் செய்தாள். வெட்கத்தினால் முகத்தைக் கைகளால் மூடிக் கொண்டாலும் விரலிடுக்கு வழியாக அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். 'என் இதயம் ஏன் இப்படித் தடதடக்கிறது?' என்று தவித்தாள். ஆனால் அந்தத் தவிப்பே இதமாக, இன்பமாக இருந்தது.

அவன் அவளை அழைத்தான். குரல் கேட்ட குமரி 'களுக்' கென்று சிரித்து விட்டு ஒதுங்கி ஓடினாள். நெளிந்து, வளைந்து ஓடும் அவள் அழகை ரசித்தவன் அவளைப் பிடிக்க வேண்டுமென்ற ஆவலினால் அவளைப்பின்தொடர்ந்தான். நெடிதுயர்ந்த மரங்களிடையே புகுந்து ஒளிந்து ஓடினாள் அவள். சிறிது நேரம் அவளை ஓடவிட்டு மகிழ்ந்த சத்தியன் பிறகு ஒரே தாவலில் அவளைப் பிடித்து விட்டான். அவன் பிடியிலே அவள் தளிர் உடல் நடுங்கியது. அவளுக்குமே அது புதிய அனுபவம்.

இருவரும் ஓடைக் கரையிலே உட்கார்ந்து கொண்டார்கள். சலசலத்து ஓடும் ஓடை நீர் அவர்கள் கால்களை வருடிக் கிசுகிசு மூட்டியபடி ஓடிக் கொண்டிருந்தது. ஒரு பெண்ணோடு என்ன பேசுவது, எதைப் பேசுவது, எப்படிப் பேசுவது என்று தெரியாமல் பளபளக்கும் அவள் விழிகளையே பார்த்தபடி அமர்ந்திருந்தான் சத்தியன். கபடமற்ற அவன் முகத்தையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள் பூங்குழலி. (தொடரும்)

சுப்பன் கற்ற பாடம்

நிர்மல் நாத்

வீரப்பன்பட்டி கிராமத்தில் சுப்பன் என்றொரு சிறுவன் இருந்தான். அவன் தந்தை விறகு வெட்டி விற்பவர். சுப்பன் எப்போதும் விளையாட்டிலேயே காலம் கழிப்பான். அவனுடைய தாயார் என்ன வேலை சொன்னாலும் அவன் கேட்க மாட்டான்.

காலையில் குளிப்பதற்குத் தண்ணீர் இறைத்து விடுமாறு தந்தை சொல்வார். சுப்பன் மெதுவாக வெளியே நழுவி விடுவான்.

''டேய், கடையிலே போய் உப்பு வாங்கி வாடா!'' என்பார் அவனுடைய தாயார்.

''போம்மா! என்னாலே முடியாது! அதையெல்லாம் நீ போய் வாங்கிக்கோ!'' என்று கூறிவிட்டு வெளியே பறந்துவிடுவான் விளையாடுவதற்கு. அடுத்து, அவன் வீட்டுக்குத் திரும்புவது மதியம் சாப்பிடத்தான்.


அதற்குப் பிறகும் அவனை வீட்டில் காண முடியாது. ஊர் சுற்றுவதும், சாப்பிடுவதும், தூங்குவதும்தான், சுப்பனின் அன்றாடச் செயலாக இருந்தது.

இப்படியே நாட்கள் கழிந்துகொண்டிருந்தன. சுப்பனின் பெற்றோருக்கு அவனை எப்படித் திருத்துவது என்றே தெரியவில்லை.

ஒரு நாள் சுப்பனின் மாமன் அவர்கள் வீட்டுக்கு வந்தார். சுப்பனின் பெற்றோர் தம்முடைய மகனைப் பற்றிக் கூறி வருந்தினர். அவரும் சுப்பனின் செயலைக் கண்டார். அவர் ஊர் திரும்பும் போது அவர்களுக்கு ஒரு யோசனை கூறிச் சென்றார்.

மறு நாள் காலை எட்டு மணி ஆகிவிட்டது. சுப்பன் மெதுவாகக் கண் விழித்தான். அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவனுடைய தாயும் தந்தையும் இன்னும் உறங்கிக் கொண்டிருந்தனர்!

சிறிது நேரம் புரண்டு புரண்டு படுத்தான். அப்பொழுதும் அவர்கள் எழுந்திருக்கவில்லை. அவனுக்குப் பசி எடுத்தது. எழுந்து பல் துலக்கிவிட்டுச் சமையல் அறைக்குச் சென்றான். பழைய





சோறுதான் பானையில் இருந்தது. ஒரு நாள்கூட அவன் அதை உண்டதில்லை. ஆனால் இன்று பசியின் காரணமாக அதைத் தானாக எடுத்து உண்டு பிறகு வெளியே சென்று விட்டான்.

கொஞ்ச நேரம் சென்ற பிறகு, அவன் விளையாடக் கோயில் பக்கம் வந்தான். அங்கு அவனுடைய தந்தை உட்கார்ந்து அரட்டை அடிப்பதைக் கண்டான். என்றுமே அவன் தந்தை அப்படி இருந்ததில்லை. தினமும் காலையில் விறகு வெட்டச் சென்றால் மாலையில் எல்லா விறகும் விற்ற பிறகுதான் வருவார். சுப்பனுக்கு அவன் அப்பா வேலைக்குச் செல்லாதது வருத்தமாக இருந்தது. தனக்கு மாலையில் காக கிடைப்பது போய்விடுமே என்ற எண்ணம் தோன்றியபோது அவனுக்கு அழுகையே வந்துவிடும் போலிருந்தது.

மதியம் வீட்டுக்குத் திரும்பினான். அங்கே மற்றோர் ஆச்சரியம் காத்திருந்தது. அவனுடைய அம்மா அடுத்த வீட்டுப் பெண்ணுடன் ஊர் வம்பு பேசிக் கொண்டிருந்தாள். வீட்டில் சென்று பார்த்தபோது சோறு சமைக்கவில்லை என்று புரிந்தது.

அம்மாவிடம் வந்து கோபத்துடன், "ஏன் சோறு சமைக்கவில்லை?" என்று கேட்டான்.

"உனக்கு விளையாடுவது மட்டும் தானே பிடிக்கிறது? ஏதாவது வேலை சொன்னால் கேட்கிறாயா? அதுபோல் எனக்கும் ஊர் வம்பு பேசத்தான் பிடிக்கும். இனிமேல் வீட்டு வேலையெல்லாம் செய்யப் போவதில்லை" என்றாள். சுப்பனுக்குச் 'சுருக்'கென்று தைத்தது. பசியுடன் சுருண்டு படுத்துவிட்டான்.

மாலையில் தந்தையிடம் காக கேட்டான். "நான் வேலைக்குப் போகவில்லை; என்னிடம் பணம் இல்லை" என்றார்.

"ஏன் வேலைக்குப் போகவில்லை?" என்று கேட்டான்.

"உனக்கு விளையாடப் பிடிப்பது போல் எனக்கு அரட்டை அடிக்கத்தான் பிடிக்கும். எனவே, இனி மேல் நான் வேலைக்குப் போகமாட்டேன்" என்றார். சுப்பனுக்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை.

தான் எந்த வேலையும் செய்யாமல் ஊர் சுற்றியது எவ்வளவு தவறு என்பதை மெதுவாக உணர ஆரம்பித்தான். தன்னைப் போல் பெற்றோரும் வேலை செய்யாமல் இருந்தால் சோறும், காசும் கிடைக்காது என்பதை உணர்ந்தான்.

மறுநாள் முதல் பெற்றோர்கள் சொல்லும் எல்லா வேலைகளையும் செய்வது என்று தீர்மானித்தான்.

மனிதப் பண்பு

கி. இளங்கோ



அழகனூரில், சுரேஷ் என்றொரு சிறுவன் இருந்தான். அவன் அந்த ஊரில் இருந்த உயர்நிலைப் பள்ளியில் பதினோராம் வகுப்பு படித்து வந்தான். அவன், அவனது பெற்றோருக்கு ஒரே பிள்ளை. அவனுடைய அப்பா அரசு அலுவலகம் ஒன்றில் அக்கவுண்டெண்டாகப் பணியாற்றி வந்தார்.

சுரேஷ், அவனுடைய வகுப்பில் படிக்கும் நண்பர்கள் சிலரின் மூலம் அவ்வூர்க் கல்லூரி மாணவருடன் நட்பு கொண்டான். அவர்கள் எல்லாம் வெளியூர்களிலிருந்து வந்து ஹாஸ்டலில் தங்கிப் படிக்கும் மாணவர்கள். அவர்கள் கேட்கும் போதெல்லாம் தட்டாமல் பெற்றோர்கள் பணம் அனுப்பிக் கொண்டிருந்ததால் தீய வழியில் நிறைய செலவுகளைச் செய்தார்கள். இவற்றில் பல சுரேஷையும் பிடித்துக் கொண்டன.

இந்தப் பழக்கங்களினால் அவனுக்குப் பணம் நிறையத் தேவைப்பட்டது.

சுரேஷ், தன் வீட்டில் அடிக்கடி செலவுக்கென்று பணம் வாங்கினான். கொஞ்சம் அதிகமாகத் தேவைப்பட்ட போது, தனது தந்தையின் பர்ஸிலிருந்தும், பாக்கெட்டிலிருந்தும் திருட ஆரம்பித்தான். இவையெல்லாம் தவறுகள் என்று அவன் மனத்தில் படவே இல்லை.

அன்றிரவு எட்டு மணி இருக்கும். சாப்பிட்டுவிட்டுப் படுக்கப் போனதும் சுரேஷின் அப்பா தனது சட்டையைத் தற்செயலாக எடுத்துப் பார்த்த போது, சட்டைப் பையில் தான் வைத்திருந்த ஐம்பது ரூபாய் காணாமற் போய் விட்டதைக் கண்டார்.

''கீதா, கீதா! இங்கே கொஞ்சம் வாயேன்!'' என்று தம் மனைவியைக் கூப்பிட்டார். சுரேஷின் அம்மா வந்து நின்றார்.

''ஷர்ட் பாக்கெட்டிலிருந்த ரூபாயைப் பார்த்தாயா?.... காணோமே?''

''நான் பார்க்கலியே!''

''அது ஆபீஸ் பணமாச்சே. நாளைக்குக் கணக்கிலே சேர்த்தாகணும். என்ன பண்ணறது? கடவுளே! பஸ்ஸில் வரும் போது எவன் பிக்பாக்கெட் அடிச்சானோ?.... மாசக் கடைசியிலே எவன் வைச்சிருக்கப் போறான், நமக்குக் கடன் தர? அந்தப் பணத்தைக் கட்டாமல்

விட்டால் வேலையை விட்டுத் தள்ளினலும் தள்ளிவிடுவார்களே !'' என்று கதறினர் சுரேஷின் அப்பா.

''சுரேஷ், நீயேதும் பார்த்தாயா ?''

''இல்லேம்மா. நான் அந்தப் பக்கமே போகலே !'' என்ருன் சுரேஷ்.

அவனுடைய அப்பா, பணம் காணுமல் போய்விட்டதற்காக வருந்தியதை நினைத்துக் கொண்டே படுத்திருந்தான் சுரேஷ். அவர் அப்பணத்தை நாளைக் கணக்கில் சேர்க்காவிட்டால் தமக்கு வேலை போய்விடும் என்று சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. தன்னுடைய அப்பாவுக்கு வேலை போய்விட்டால் தன் கதியும் தன் குடும்ப நிலையும் என்னவாகும் என்று நினைத்துப் பார்த்தான். அவனுக்கு அழுகையே வரும்போல் இருந்தது. அவன் செய்த தவற்றை அவனுடைய மனச்சாட்சி சுட்டிக் காட்டிக் கொண்டேயிருந்தது. தான் செய்த தவற்றின் விளைவை எண்ணிப் பார்த்தான்.

அடுத்த நாள் காலை. சுரேஷ் தன் தந்தையின் கால்களில் விழுந்தான்.

''அப்பா ! என்னை மன்னித்து விடுங்கள் ! அந்தப் பணத்தை எடுத்தது நான்தான் !''

சுரேஷின் விழிகளிலிருந்து பெருகிய கண்ணீர் வெள்ளம் அவருடைய பாதங்களை நனைத்தது. இதயம் குளிர்ந்தது. சுரேஷைப் பிடித்துத் தூக்கி நிறுத்தினர். அவனுடைய கைகளில் அந்த ஐம்பது ரூபாய் இருந்தது.

அவர் பேசினர் :

''சுரேஷ் ! உண்மையில் இது ஆபீஸ் பணமல்ல. நம்முடைய பணம்தான். நீ தீய நண்பர்களுடன் சேர்ந்து புகை பிடிப்பதும் சீட்டாடுவதும் எனக்குத் தெரியும். இந்த ஐம்பது ரூபாயை எடுத்தது நீதான் என்றும் தெரியும். உன்னைத் திருத்துவதற்காகவே இப்படி ஒரு நாடகமாடினேன்.''

மகாத்மா காந்திகூடத் தமது சிறு வயதில் புலால் உண்டார்; மது அருந்தினர்; புகை பிடித்தார்; பொய் சொன்னர்; காசு திருடினர். ஆனல், இந்தத் தவறுகளை அவர் உணர்ந்து திருந்திய போது அண்ணலானர்.

வாழ்க்கையில் தவறுகள் செய்வது 'மனித இயல்பு'. அவற்றை உணர்ந்து திருந்தியபோது அண்ணலானர்.

வாழ்க்கையில் தவறுகள் செய்வது 'மனித இயல்பு'. அவற்றை உணர்ந்து திருந்துவது 'மனிதப் பண்பு'.

சுரேஷ் இப்போது தவறே செய்வதில்லை !

OSR

தூண்டிலால் மீன் பிடிக்கும் பறவை

ஜி. பாஸ்கர்

மீன் பிடிக்கத் தூண்டிலை நாம் பயன்படுத்துகிறோமில்லையா? இதே போன்ற தந்திரத்தை ஹிரான் (Heron) என்ற பறவை கையாளுகிறது [என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? ஹிரான் என்பது பச்சை நிறமான பறவை. அது அமெரிக்காவிலுள்ள மியாமி என்ற கடல் பிராணிகள் உள்ள கண்காட்சியில் வசிக்கிறது. இந்த அதிசயமான பறவைக்கு அலகு நீண்டு கூர்மையாக இருக்கிறது. மிகவும் அறிவும், சாமர்த்தியமும் நிறைந்த பறவை. இது வரும்பொழுதே அதன் அலகில் ஒரு ரொட்டித் துண்டை எடுத்து வருகிறது. நீரோட்டம் உள்ள ஓடை அல்லது கால்வாய்க் கரையில் மீன்கள் இருக்கும் இடம் தேடிச் சென்று அமர்ந்து கொள்ளுகிறது. அலகிலுள்ள ரொட்டித் துண்டைத் தண்ணீரில் மிதக்கவிட்டுக் கூர்ந்து கவனிக்கிறது. தண்ணீரின் அடியில் உள்ள மீன், ரொட்டித் துண்டைக் கவ்வ நீர் மட்டத்துக்கு வருவதுதான் தாமதம், கண் இமைக்கும் நேரத்தில் மீனைக் கொத்தி விடுகிறது. மனிதன் தூண்டில் முள்ளில் மீன் சிக்கியதும் எப்படி நொடிப் பொழுதில், அதைச் சுண்டி எடுத்துவிடுகிறானோ, அதே வேகமாக, அதேபோன்ற சாமர்த்தியத்துடன் ஹிரான் என்ற இந்தப் பறவையும் செய்து விடுகிறது.

இந்த ஹிரான் என்ற பறவை நீரோடையில் மெதுவாக நகர்ந்து சென்று, நீரில் நடமாடும் மீன்களுக்குக் கொஞ்சமும் தோன்றாதவாறு தனது வேலையைச் செய்கிறது. மீன்கள் விரும்பி ஏற்கும் ரொட்டித் துண்டு, அல்லது மாமிசத் துண்டு இவைகளுக்கு எப்படிக் கிடைக்கிறது? இதற்காக இந்தப் பறவை, ரொட்டி, மாமிசம் விற்கும் கடைகளுக்குச் சென்று இவைகளைச் சேகரிக்கிறது. அலகில் கொத்திக் கொண்டு வந்து, மீன் பிடிக்க வருகிறது.


ஓர் இடத்தில் மீன் பிடிக்க ஹிரான் பறவை வருகிறது என்று வைத்துக் கொள்வோம். ரொட்டித் துண்டையோ அல்லது மாமிச உணவையோ நீரில் மிதக்கவிட்டு, கரையில் அமர்ந்து கவனிக்கிறது. மீன்கள் அதை நெருங்கவில்லை என்றால், சற்றுப் பொறுத்திருந்து பார்த்துவிட்டு, அந்த இரையை மீண்டும் தன் அலகில் கொத்தி எடுத்துச் சென்று, மீன்கள் நடமாடும் வேறு இடத்துக்குச் சென்று, அந்த இரையை மிதக்கவிட்டு அங்கேயே அமர்கிறது. இம்மாதிரியான வகையில், ஹிரான் சுமார் இருபத்தி ஐந்து நிமிட நேரத்தில் ஒரு டஜன் மீன்களைப் பிடித்துத் தின்று விடுகிறது. அநேகமாக ஒன்று, இரண்டு தடவைகளில்தான் மீன்கள், இந்த ஹிரான் பறவையை ஏமாற்றிவிட்டு, உணவைக் கவ்விக் கொண்டு நீரில் மறைந்து விடுகின்றன.

இம்மாதிரியாக, அதி நுட்பமான முறையில், மனிதன் செய்வதுபோன்ற காரியங்களைப் பறவைகள் அவற்றின் சிந்திக்கும் திறமையால், தந்திரத்தால், செய்து உணவைத் தேடிக் கொள்கின்றன. இம்முறையை மீண்டும், மீண்டும் கையாண்டு, அதன் திறமையை இன்னும் அதிகமாக வளர்த்துக் கொள்ளுகின்றன. புதிய முறைகளைக் கடைப்பிடிக்கவும் செய்கின்றன.

பறவைகளின் வாழ்க்கை முறையையும், அவை உணவு தேடும் முறையையும் ஆராய்வது மிகவும் சுவாரசியமானது. இதையே ஒரு தனிக் கலையாக, ஆராய்ச்சியாகப் பல அறிஞர்கள் செய்து வருகின்றனர். இதற்கு ஆர்னிதாலஜி என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். நமது நாட்டில் இந்தப் பறவையியல் ஆராய்ச்சியில் பல ஆண்டு காலம் உழைத்து, பல நூல்களை எழுதியவர் ஒருவர் இருக்கிறார். அந்த முதியவருக்கு டாக்டர் ஸலீம் அலி என்று பெயர். அவருக்குப் பல வெளிநாட்டுப் பறவையியல் அறிஞர்களோடு தொடர்பு உண்டு. இவைகளையெல்லாம் பற்றிப் படிக்கப் படிக்க, மிகவும் இனிமையாகவும், அறிவுக்கு விருந்தாகவும் இருக்கும்.



தெரியுமா?



2022. பூச்சிகளின் இயல்களைப் பற்றி ஆராய்பவருக்கு என்ன பெயர்?

2023. காற்றின் பலத்தை அறிய எந்த அளவு கருவியைப் பயன்படுத்துகின்றனர்?

2024. நாம் அருந்தும் தேயிலைக் கஷாயத்தை அளவுக்கு அதிகமாகக் காய்ச்சினால் அதிலிருந்து ஒரு பொருள் கிடைக்கிறது. இது தோல்களைப் பதம் செய்யப் பயன்படும் ஒரு ரசாயனம். இதன் பெயர் என்ன?

2025. இஸோதெர்ம் (*Isotherm*) என்றால் என்ன? இந்தச் சொல்லை எங்கு பயன்படுத்துகின்றனர்.

2026. வடதிசை ஒளி (*Northern lights*) என்பதற்குச் சரியான விஞ்ஞானப் பெயர் தெரியுமா?

2027. ஆஸ்திரேலியாவில் உள்ள மாகாணங்கள் எவ்வளவு?

2028. ஜப்பானின் தேசிய மலரின் பெயரென்ன?

2029. ஸெப்ரானோ (*Zebrano*) என்பது என்ன?

2030. தென் அமெரிக்காவைச் சேர்ந்த பெரிய, கொரித்துத் தின்னும் வகையைச் சேர்ந்த ஒரு பிராணியை கிழக்கு ஆங்கிலியாவில் கொண்டுபோய் விட்டார்கள். இப்போது அது ஏராளமாகப் பெருகிப் பெரும் தொல்லை தருகிறது. இதன் பெயர் என்ன?

2031. சாமுவேல் லாங்ஹார்ன் க்ளமெண்ட்ஸ் — என்பது ஒரு பிரபல எழுத்தாளரின் உண்மைப் பெயர்..... ஆனால் இவ்வளவு நீளமான பெயரில் அவரை யாருக்கும் தெரியாது. அவரது புகழ்ப் பெயர் எது?

2032. 'மை ஃபேர் லேடி' என்ற புகழ்பெற்ற இசை நாடகம், ஒரு புகழ்பெற்ற எழுத்தாளரின் புகழ்பெற்ற படைப்பின் தழுவல். அவர் பெயர், அந்தப் படைப்பின் பெயர் என்ன?

2033. ஆங்கிலக் கவிதையின் தந்தை (*Father of English Poetry*) என்று யாரைக் குறிப்பிடுவார்கள்?

2034. மேல் நாட்டு இசையில் அடகியோ (*Adagio*) என்றும் அலேகிரோ (*Allegro*) என்றும் இரு வழக்குகள் உண்டு. இதன் பொருள் தெரிய வேண்டாமா உங்களுக்கு?


2035. இன்றைய நியூயார்க் என்று அழைக்கப்படும் நகரம் பதினேழாம் நூற்றாண்டில்தான் இப்பெயர் பெற்றது. அதற்கு முன்பு இதற்கு என்ன பெயர்?

2036. உலகில் வாழும் நான்கு கால் பிராணிகளில் மிக வேகமாக ஓடக்கூடியது எது?

2037. ஐரோப்பாவில் குரங்குகளே கிடையாது. ஆனால் ஒரே ஒரு இடத்தில் மட்டும் குரங்கு காணப்படுகிறது. மிகவும் மூர்க்கமான சுபாவம் உடைய இதை என்ன பெயரில் அழைக்கிறார்கள்?


2038. கழுகுகளின் கூட்டுக்கு ஆங்கிலத்தில் ஒரு பெயருண்டு. அது தெரியுமோ?

தெரியுமே!



2022. என்டோமாலஜிஸ்ட் (Entomologist. 2023. பியோ ஃபோர்ட் ஸ்கேல் (The Beaufort Scale) 2024. டானின் (Tanin) 2025. தேசப் படத்தில் ஒரே மாதிரியான சீதோஷ்ண நிலையுடைய இடங்களை இணைக்கும் நேர் கோட்டுக்கு இஸோ தெர்ம் என்று பெயர். கால மாறுபாட்டைக் கணிக்கப் பயன்படுகிறது. 2026. அரோரா போரியலிஸ் (Aurora Borealis). 2027. டாஸ்மேனியாவையும் சேர்த்து ஏழு. 2028. கிரிஸாந்தமம் (Chrysanthemum). 2029. ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு மரம். இதன்மீது மஞ்சளாகவும் கறுப்பாகவும் கோடுகள் பட்டையாக இருக்கும். வரிக் குதிரைபோல. அதனால் இதற்கு அப்பெயர். 2030. காய்பூ (Coypu) என்ற பிராணி. 2031. மார்க் ட்வைன். 2032. ஜார்ஜ் பெர்னார்ட் ஷாவின் பிக்மாலியன் என்ற நாடகத்தின் தழுவல் தான் மை ஃபேர் லேடி. 2033. ஜ்யோஃப்ரி சாஸரை (Geoffrey Chaucer). 2034. இசையை மெதுவாகப் பாடுவதை அடகியோ என்றும் வேகமாக இசைப்பதை அலேகிரோ என்றும் கூறுவார்கள். 2035. புதிய ஆம்ஸ்டர்டாம் (New Amsterdam) என்று பெயர். 2036. வேங்கைப் புலி (சீட்டா). 2037. ஆப்பிரிக்காவைத் தொட்டுக்கொண்டுள்ள ஜிப்ரால்டரில் வாழும் குரங்குகளை பார்பேரி ஏப் என்றழைக்கின்றனர். 2038. ஐரி (eyerie) என்று பெயர்.

'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்



சேமிப்பதற்கு யூகோ பாங்க்
அருகாமையில் உள்ள
வசதியான பாங்க்

நீங்கள் எங்கு இருந்தாலும் அங்கே உங்களருகில் ஒரு வசதியான யூகோ பாங்க் உள்ளது. சேமிப்பை எளிதாக்குவதற்காகவே. உங்களை வரவேற்கவும், உங்கள் சேமிப்பை வளரச் செய்யவும் நாடு முழுவதும் எங்கள் கிளைகள் பரந்து இருக்கின்றன.

விவரங்களுக்கு உங்கள் அருகில்
உள்ள யூகோ பாங்க் கிளையை
அணுகவும்

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

UCOC-50A TAM


Agfacolor®
இயற்கையான
வண்ணங்கள்
பொருந்திய பிலிம்.
ஆக்பா-கேவார்ட், இந்தியா லிமிடெட்
CN 6
NEGA
CT 18